கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை

15-4-1973

50 காசு



ஆண்மை—
திடவடிவம்,
தீரம், திறமை,
கம்பீரம்.
ஆண்மையின்
பன்முகப்
பண்புகளைப்
படித்தறிந்த
படைப்பு
'எஸ்டர்காட்'



எஸ்டர்காட்®


ஆண்மகன் இதோ ஆளவருகிறான். எங்கும் அவன்
செங்கோல். 'எஸ்டர்காட்' அவன் உடுப்பு.
'எஸ்டர்காட்' பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன்

அட்டைப்படக் குழந்தை:

அடடே, இந்த டப்பாவிலே யிருந்த ஸ்வீட்டெல்லாம் எங்கே மாயமாய் போச்சு?

வண்ணப்படம்:
எஸ். ஆர். சத்யகுமார்





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

கோகுலம்

மலர் 2 :: இதழ் 1


ஏப்ரல் 15, 1973

பிரமாதீச, சித்திரை 3

சந்தா விவரம்:

தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம்	ரூ.	7–00
ஆறு மாதம்	ரூ.	3–50
வெளி நாடுகள்	ரூ.	18–00



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்


கேசி வதம்

கேசி என்ற கொடிய அரக்கன் கம்சனால் அனுப்பப்பட்டுக் கிருஷ்ணமூர்த்தியைக் கொல்லும் பொருட்டுச் சண்டப் பிரசண்ட வேகத்துடன் ஆயர்பாடியை அடைந்தான்.

அவன் குதிரை வடிவத்தை எடுத்துக் கொண்டான். கால் குளம்புகளினால் புழுதியை எழுப்பி மண்ணுலகையும் விண்ணுலகையும் மூடிவிட்டான். அவனுடைய பாரத்தால் ஆதிசேடன் பணாமுடிகளைத் துளக்கினான். சராசரங்கள் நடுநடுங்கின. மேகங்கள் சிதறி ஓடின. அக்குதிரை கனைப்பது இடியோசை போல் கேட்பவர்கள் காதைச் செவிடாக்கியது. கண்களில் அனற்பொறிகள் சிந்தின. பச்சை மரங்கள் பற்றி எரிந்தன. அதன் வால் காலபாசம் போல் சுழன்றது. கோகுலத்தில் வாழ்ந்த ஆயர்கள் அஞ்சிக் கண்ணபிரானிடம் தஞ்சம் புகுந்தார்கள்.

கேசி அரக்கன் பலரையும் துரத்திக் கொண்டு கண்ணனைத் தேடி வந்தான். பகவான் அவன் முன்னே வந்து, ''கொடியவனே! என்னைத் தேடி வந்தனையா? இதோ நான் உன் முன்னே நிற்கின்றேன். உனக்கு முடிவு காலம் வந்துவிட்டது'' என்றார்.

அவன் மலைக் குகைபோன்ற வாயைப் பிளந்து கொண்டு வாசுதேவரை விழுங்க முயன்றான். அண்ட பிண்ட சராசரங்களையும் தமது திருவுதரத்தில் அடக்கிய அரவணைச் செல்வர் அவனுடன் இடம் வலமாகச் சுழன்று போர் புரிந்தார். அக்குதிரை அவரை உதைத்தது. கண்ணபிரான் அதனைப் பொருட்படுத்தாமல் கால்களைப் பிடித்துச் சுழற்றி எறிந்தார். நெடுந்தொலைவில் போய் வீழ்ந்தது. உதிரத்தைக் கக்கியது. மேலும் வெகுண்டு எழுந்து வாயைப் பிளந்து கடிக்க வந்தது. ஐயன் அதன் வாயில் தம் கையை நீட்டினார். அவருடைய திருக்கரம் வஜ்ராயுதம் போல் இருந்தது. கேசி தனது கூரிய பற்களால் கடித்தான். அவன் பற்கள் நொறுங்கி விழுந்தன. கண்ணபிரான் தம் கரத்தை வாய்க்குள் விட்டு அவன் குடலைப்பிடித்து இழுத்தார். அவன் விழி பிதுங்கி 'ஓ' வென்று கதறிப் பதறி மாண்டான்.



தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். மலை போல் வந்த துன்பம் பனிபோல் நீங்கப்பெற்ற கோபாலர்கள் கோவிந்தரை வணங்கித் துதி செய்தார்கள்.

நாரதர் இங்கும் வந்தார்

பரம பக்த சிகாமணியாகிய நாரத முனிவர் அங்கு வந்தார். பகவானை அஞ்சலி செய்து அவருடன் தனிமையான இடத்தில் அமர்ந்து கூறுகின்றார்.

''அகில உலக நாயகரே! உமக்கு வணக்கம். கட்டையில் கனல் போலவும், எள்ளில் எண்ணெய் போலவும் நிறைந்து நின்ற நிமல மூர்த்தியே வணக்கம். முன்னே உலகுக்கு இடர் புரிந்த அநேக அரக்கர்களை வதைத்தருளினீர். பூபாரந் தீர்க்கவந்த கோபால குணமணியே! கேசியை வதைத்தீர். இனி வியோமாசுரனை வதைக்கப் போகின்றீர். உம்மை மதுரைக்கு அழைக்கும் பொருட்டுப் பரம பக்தராகிய அக்குரூரர் வருவார். மதுரையில் உம்மைக் கொல்லுமாறு நிற்கின்ற சாணூர முஷ்டிகர்களையும், கொடியவனாகிய கம்சனையும் மடியச் செய்யப் போகின்றீர். சங்கன், ஜராசந்தன், காலவயன், சிசுபாலன், தந்தவக்ரன், முயகாசுரன், நரகாசுரன் முதலியவர்களின் வதம் உம்மால் நிகழ இருக்கின்றது. இந்திரனை வென்று தேவ பாரிஜாதத்தருவைக் கொணருவீர். பதிவிரதைகளாகிய அரச கன்னியர்களை மணக்கப் போகின்றீர். நிருகு மன்னனுடைய சாபத்தை நீக்குவீர். சாம்பவியைத் திருமணஞ் செய்து மகாமணியை அடையப் போகின்றீர். விரைவில் துவாரகாபுரியை அடைவீர். மாண்ட மறையவன் மைந்தனை மீண்டு எழுப்புதற்பொருட்டு யமபுரம் போகவும் செய்வீர். பாண்டவர் பொருட்டுத் தூது போவீர். பார்த்தசாரதியாக இருந்து துரியோதன வதம் புரிவீர். உம்மைப் புகழ ஆதிசேடனாலும் ஆகாது. அடியேன் எவ்வாறு புகழுவேன்? பிரமாதி தேவர்களும் உமது திருவடியைவழிபட்டு உய்வு பெறுகின்றார்கள். உமது திரு

வருளைப் பெற்றேன்'' என்று கூறி மறைந்தார்.

வியோமாசுர வதம்

கண்ணபிரான் ஒரு நாள் பிருந்தாவனத்தில் ஆயர்களுடன் பசுக்களை



மேய்த்துக் கொண்டிருந்தார். கண்ணன் அரசர் என்றும், சிலர் அமைச்சர்கள் என்றும், சிலர் கள்வர்கள் என்றும் அமைத்து விளையாடினார்கள். மாயாசுரனுடைய மகனாகிய வியோமாசுரன், பெரிய மாயையில் வல்லவன். அவன் இடைச் சிறுவனாக வடிவங் கொண்டு இவர்களுடன் கூடி விளையாடினான். எம்பெருமான் அவனைப் பார்த்து உணர்ந்தும் ஒன்றும் அறியாதவர்போல் இருந்தார். அவன் விளையாட்டாக ஒவ்வொரு கோபாலனையும் திருடிக் கொண்டு போய் மலைக் குகையில் அடைத்துக் கற்பாறையால் மூடி விட்டான். சிலரே மிஞ்சியிருந்தார்கள். அரிமுகுந்தன் அவன் அருகில் சென்று, ''கள்ளப் பயலே!'' என்று கூறி அவன் கழுத்தைப் பிடித்து நெரித்து முறித்துக் கொன்று விட்டார். குகையிடம் சென்று மூடிய பாறையைத் தமது திருவடியால் உதைத்து, அனைவரையும் மீட்டு, ஆடியும் பாடியும் கோகுலம் வந்து சேர்ந்தார்.

பரிசு பெற்றவர்கள்



ஆர். சுரேஷ்




ஜே. வைத்தியநாதன்

கோகுலத்துக்கு ஒரு வயது நிறைந்து இரண்டாவது வயது பிறந்திருக்கிறது. உங்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் உள்ளத்திலும் இந்த ஓர் ஆண்டு காலமாக 'கோகுலம், கோகுலம்' என்று ஒலித்து உங்களையெல்லாம் மகிழ்ச்சியால் மூழ்கடித்துக் கொண்டிருக்கும் இந்த மந்திரப் பெயரைச் சூட்டியவர்களின் பெயர்களைத்தானே நீங்கள் முன்பு படித்தீர்கள். அவர்களுடைய உருவத்தையும் நீங்கள் பார்த்து மகிழ, 'கோகுலம்' என்று பெயர் சூட்டித் தங்கக் காசுகளை வெள்ளிக் கொழுக்கட்டையோடு பரிசாகப் பெற்ற பதின்மூன்று அதிர்ஷ்டசாலிகளும் இதோ. கோகுலம் இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும்போது இவர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்



எஸ். முரளிதரன்



எஸ். கோபாலகிருஷ்ணன்



க. ராமச்சந்திரன்



என். சிவஞானம்



ஏ. ரோஹிணி



பி. சுலோசனா



கே. வி. காமலா



வி. ராஜேசுவரி




ஆர். பாமாசெல்வி



குமாரி எஸ். சரோஜா



செல்வி ஆர். இந்திரா ராகவன்



சிலந்தி தோன்றியது?



புராதன கிரேக்கர்கள், கடவுளர்களின் கடவுளான ஜூபிடரைத் தங்களுடைய தந்தையாகக் கருதினார்கள். ஜூபிடரின் குழந்தைகளில் மிக்க அழகு வாய்ந்தவள் அதினி (Athene) தான். இவளை மினர்வா என்றும் சமயங்களில் அழைப்பார்கள். அதினிக்குப் பலவிதப் பொறுப்புக்களை ஜூபிடர் கொடுத்திருந்தார். ஒலிம்பஸ் மலையிலுள்ள கடவுளர்களின் இருப்பிடத்திலிருந்து தனது அலுவல்களைக் கவனிப்பாள் அதினி. சமாதானத்துக்கும் புத்திசாலித்தனத்துக்கும் பொறுப்பானவள் அதினி.

விண்ணுலகிலிருந்து கடவுளர்கள் பூவுலகில் கிரேக்க நாட்டில் புதிதாக உருவாகும் ஒரு நகரத்தை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த நகரம் பூர்த்தியடையும்போது அதற்கு என்ன பெயர் வைப்பது என்பதைப் பற்றிய சர்ச்சை எழுந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயரைக் கூறினார்கள். முடிவில் நெப்டியூனும் அதினியும் கூறிய பெயர்களே பொருத்தமாகப் பட்டது எல்லோருக்கும். ஆனால் இரண்டில் எது? யாரும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. ஆகவே தலைவரான ஜூபிடர் இதற்கு ஒரு போட்டி வைத்து முடிவெடுப்பது என்று தீர்மானித்தார். மனித இனத்துக்கு மிக அவசியமான ஒரு பொருளை நெப்டியூன், அதினி இருவரில் யார் கொண்டு வருகிறார்களோ அவர்களே புதிய நகருக்குப் பெயர் சூட்டும் உரிமையுடையவர்கள் ஆவார்கள் என்றார் ஜூபிடர்.

நெப்டியூனின் கையில் எப்போதும் ஒரு திரிசூலம் இருக்கும். நெப்டியூன் தம் திரிசூலத்தைப் பூமியில் குத்தினார். அதிலிருந்து ஓர் அற்புதமான மிருகம் கம்பீரமாகக் கனைத்துக் கொண்டு வந்து நின்றது. அதுவே இன்றைய குதிரை.

''நான் மனித இனத்துக்கு அளிக்கும் மகத்தான பரிசு இந்த மிருகம். நான் இதைக் குதிரை என்று அழைக்கிறேன். ஏர் இழுத்து உழுது பயிரிடவும், வண்டி இழுக்கவும், தேர்களில் பூட்டி ஓட்டவும், ஏன், தன்மீதே மனிதரைச் சுமந்து பிரயாணம் போகவும் இப்படிப் பலவிதங்களில் இம்மிருகம் மனிதனுக்கு உதவியாக இருக்கும்'' என்றார் நெப்டியூன். கூடியிருந்த கடவுளர்கள் அந்தக் கம்பீரமான மிருகத்தைக் கண்டு வியந்தார்கள். நெப்டியூன்



தான் வெற்றி பெறுவார் என்றும் எண்ணினார்கள்.

அதினியின் முறை வந்தது. அவள் கையில் ஏதோ ஒரு மரத்தின் இலையை ஏந்தி வருவதைக் கண்ட எல்லோரும் ஏளனமாக நகைத்தார்கள்.

''சிரிக்க வேண்டாம்... சித்தனைக்கு இடம் அளியுங்கள்'' என்றாள் அதினி. ''நான் கொண்டு வந்துள்ள இம்மரம் மனித இனத்தின் வலிமைக்கும் சமாதானத்துக்கும் வழி வகுக்கும். இதன் பெயர் ஆலிவ் மரம். இதன் தண்டைக் கொண்டு வீடு கட்டலாம், படகு கட்டலாம். இதன் பழத்தை அவன் சுவைத்துண்ணலாம். இதன் காய்ந்த கிளைகளை எரிப்பதன் மூலம் கதகதப்பைப் பெறலாம். நெப்டியூன் உருவாக்கிய குதிரை மக்களை யுத்த களத்துக்கு ஏற்றிச் செல்லும், கொலையும் கொள்ளையுமே முடிவில் மிஞ்சும். என்னுடைய ஆலிவ் மரத்தினால் மக்கள் ஒற்றுமையாக வாழ முடியும்'' என்றாள். சிரித்தவர்கள் முகம் தொங்கலாயிற்று. என்றைக்குமே எல்லோராலும் போற்றப் படுவது சமாதானம்தானே? வெற்றி அதினிக்குத் தான் என்று சொல்லவும் வேண்டுமோ?

புதிய நகரத்துக்கு அதினி தனது பெயரையே சூட்டினாள். என்ன பெயர் தெரியுமா? ஏதென்ஸ்! ஏதென்ஸ் நகரம் பிறந்த கதை இதுதான்.

சிலந்தி ஏன் உண்டாயிற்று என்பதற்குக் கிரேக்க இதிகாசத்தில் இப்படி ஒரு கதை இருக்கிறது.

அதினியின் பல அலுவல்களில் ஒன்று தையல் வேலை செய்யும் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகும். கிரேக்க நாட்டில் அரக்னே (Arachne) என்ற பெயருடைய ஒரு பெண் இருந்தாள். தையல் கலையில் தன்னை மிஞ்சக் கூடியவர்கள் இந்தக் கிரேக்க நாடு முழுமையிலும் கிடையாது என்று கர்வம் கொண்டிருந்தாள் அவள். தையல் கலையின் தேவதையான அதினியையும் வெல்லும் வல்லமை பெற்றவள் தான் என்று சொல்லிக் கொண்டிருந்தாள் அரக்னே. இவளுடைய கர்வத்தை அடக்க வேண்டும் என்று முடிவு செய்தாள் அதினி. ஒரு நாள் ஒரு தொண்டு கிழவியாக உரு மாறினாள் அதினி. அரக்னேயின் இல்லத்துக்கு விஜயம் செய்தாள். கிழவியை வரவேற்றாள் அரக்னே. உரையாடல் தையல் கலை பற்றிச் சுற்றிச் சுழன்றது. வழக்கப்படி அரக்னே உலகிலேயே தான்தான் இக் கலையில் வல்லவள் என்ற ரீதியில் பேசலானாள். ''தையல் கலையின் காப்புக் கடவுளான அதினியையும் கூட நான் வெற்றி கொள்ளுவேனுக்கும்'' என்றாள் அந்த அகம்பாவக்காரி.

''எனக்கும் கொஞ்சம் தையல் வேலை தெரியும். பூவேலைகள் கூடச் செய்வேன். ஏன், இந்தக் கலையில் உன்னைக் கூட வெல்ல முடியும் என்று நினைக்கிறேன்'' என்றாள் கிழவி உருவில் இருந்த அதினி.

அரக்னே அலட்சியமாகச் சிரித்தாள். ''போட்டியிடத் தயாரா?'' என்றாள்.

அதற்காகத்தானே வந்திருந்தாள் அதினி. சவாலை ஏற்றாள். இருவரும் தையல் வேலை செய்ய ஆரம்பித்தனர். அலங்காரத் திரைச் சீலையை உருவாக்குவதில் இருவரும் முனைந்தனர். அதினியின் திரைச் சீலையில் அவளுடைய ஆலிவ் மரம் இடம் பெற்றது, அழகான வண்ணங்களில். அரக்னே தன் சித்திரச் சீலையில் ஜூபிடரைக் காளை வடிவில் சித்திரித்திருந்தாள்.

இருவருடைய திரைச் சீலைகளும் முடிவுற்றதும் இரண்டையும் அருகருகே வைத்து எட்டப் போய் நின்றபடி இரு படங்களையும் இரண்டுபேரும் நோட்டமிட்டார்கள். அரக்னேயின் முகம் வெளுத்து விட்டது. தன்னை அந்தக் கிழவி மிஞ்சிவிட்டாள் என்பதை அவள் உள்ளம் சொல்லியது. உலகின் மிகச் சிறந்த தையல்காரி என்ற புகழ் இனி தனக்கு இல்லை என்பதைத் தாங்க முடியாத பேதையான அரக்னே தறியிலிருந்து ஒரு மணிக் கயிற்றை உருவித் தன்னைத் தானே தூக்கிட்டுக் கொள்ள முற்பட்டாள்.

அவளது எண்ணத்தைப் புரிந்து கொண்ட அதினி உடனே அவளை ஒரு சிலந்தியாக்கி, ''வாழ்நாளெல்லாம் நூல் நூற்றுக் கொண்டே இரு'' என்று வாழ்த்தினாள்.

— **விகேயெம்**



தமிழ் தெரியுமா உங்களுக்கு?

நீங்களெல்லாம் தமிழில் ரொம்பக் கெட்டிக்காரர்களாமே? யாரோ சொன்னார்கள். இங்கே சில சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எங்கே, இவைகளுக்கான பொருள் உங்களுக்குத் தெரிகிறதா பாருங்கள்!

கீழ்க்காணும் சொற்கள் உறவு முறையைக் குறிப்பனவாகும். எது எந்த உறவைக் குறிக்கிறதென்று தெரிகிறதா?

1. தம்மை, 2. சனித்துவம், 3. சூனு, 4. பிரபதை, 5. கையை, 6. அருக்கை, 7. அனுசன், 8. அக்கிரசன், 9. சகோதரவன்,— 10. களம், 11. வாக்கிரன், 12. நாத்தூண், 13. விடுபதி, 14. யாமி 15. விமாதிரு, 16. மாதுலன்.

1. தாய், 2. தந்தை, 3. மகன், 4. மகள், 5. தங்கை, 6. தமக்கை, 7. தம்பி, 8. தமையன், 9. கணவன், 10. மனைவி, 11. மைத்துனன், 12. மைத்துனி, 13. மருமகன், 14. மருமகள், 15. சித்தி, 16. மாமன்.

இவை மரங்களின் பெயர்கள் எது எந்த மரத்தைக் குறிக்கிறது என்று தெரியுமா?

1. சாகி, 2. மிருடாலகம், 3. இந்திருணி, 4. குமிதகம், 5. கோசகாரம், 6. அச்சுவத்தம், 7. மூலகபல்லவம், 8. ககவககம், 9. உடுபாதகம், 10. சிகாவரம், 11. கருணம், 12. ததச்சதை, 13. கிங்கிராலம், 14. குசபலம், 15. குலவுரி, 16. சறுதாகம்.

1. சச்சமரம், 2. மாமரம், 3. புளியமரம் 4. தேக்குமரம், 5. தென்னை மரம், 6. அரசமரம், 7. முருங்கை மரம், 8. ஆலமரம், 9. பனைமரம், 10. பலா மரம், 11. எலுமிச்சைமரம், 12. வாழை மரம், 13. வேலமரம், 14. மாதுளைமரம், மரம், 13. வேலமரம், 14. மாதுளைமரம், 15. சந்தன மரம், 16. வேங்கை மரம்.

இவை யுகங்களின் வேறு பெயர்கள். எது எந்த யுகம் என்பது தெரிகிறதா?

1. கருமசம், 2. சத்தியம், 3. யக்கியம், 4. அக்கிநாயி.

1. கலியுகம், 2. கிருதயுகம், 3. துவாபரயுகம், 4. திரேதாயுகம்.

இவை நிறங்களைக் குறிக்கும் பெயர்கள். எது எந்த நிறம் என்பதைக் கண்டுபிடிக்க முடிகிறதா?

1. கௌரம், 2. தூசரம், 3. களரி, 4. பலாசம், 5. அவதாதம், 6. சோணம், 7. தூமிரம்,

1. வெண்மை, 2. மங்கின வெண்மை, 3. கறுப்பு, 4. பச்சை, 5. மஞ்சள், 6. சிவப்பு, 7. கருஞ்சிவப்பு.

கீழ்க் காணும் சொற்கள் மிருகங்களைக் குறிக்கும் பெயர்கள். எது எந்த மிருகம் என்று தெரிகிறதா?

1. நலிஞ்சிகை, 2. வாடபேயம், 3. வழுவை, 4. வாசதம், 5. தரக்கு 6. பல்லவாதம், 7. வரணம், 8. சவக்காமியம், 9. துநவை, 10. பஞ்சாசியம், 11. பிரசேவகம், 12. கட்டைக்காலி, 13. குசாட்சம், 14. சிதமை, 15. துரங்காரி, 16. மேலச்சுவகம்.

1. பசு, 2. எருது, 3. யானை, 4. கழுதை, 5. புலி, 6. மான், 7. ஒட்டகம், 8. நாய், 9. செம்மறியாடு, 10. சிங்கம், 11. குதிரை, 12. கரடி, 13. குரங்கு, 14. வெள்ளாடு, 15. எருமை, 16. சிறுத்தை.

இவை பிராணிகளின் பெயர்கள். இவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறதா உங்களால்?

1. துந்துமாரம், 2. பிலேசயம், 3. அழுங்கு, 4. சரடம், 5. மிருத்தசூதி, 6. விருசம், 7. மூங்கா, 8. கூடவற்கை. 9. நக்கிரராஜம், 10. பிலகாரி, 11. விருக்கசாயிகை, 12. தாசரி, 13. தூர்வம், 14. தேயுடலி, 15. மிரதம், 16. கருநந்து.

1. பூனை, 2. உடும்பு, 3. ஆமை, 4. ஓணான், 5. நண்டு, 6. எலி, 7. கிளி, 8. தவளை, 9. முதலை, 10. பெருச்சாளி, 11. அணில், 12. மலைப்பாம்பு, 13. மீன், 14. தேவாங்கு, 15. பாம்பு, 16. நத்தை.

இவை பூச்சிகளின் பெயர்கள். எது எந்தப் பூச்சியின் பெயர் என்று தெரிகிறதா ?

1. ஒலுங்கு, 2. தற்பகீடம், 3. யூகை, 4. பிரசம், 5. சட்சரணம் 6. தயிலபீலிகை, 7. அலம், 8. கத்தியோகம், 9. காவன், 10. மல்லூகம், 11. சரண்டம், 12. சவுசயம், 13. சாவட்டை, 14. மூர்க்கம், 15. கக்கலாத்து, 16. அளி.

1. கொசு, 2. மூட்டைப்பூச்சி, 3. பேன், 4. தேனீ, 5. வண்டு, 6. எறும்பு, 7. தேள், 8. மின்மினிப் பூச்சி, 9. சிலந்தி, 10. புழு, 11. பல்லி, 12. ஈ, 13. வண்ணத்திப் பூச்சி, 14. நாகப்பூச்சி, 15. கரப்பான் பூச்சி, 16. தெள்ளுப் பூச்சி.

இவை பறவைகளைக் குறிக்கும் பெயர்கள். எது எந்தப் பறவை என்பது தெரிகிறதா ?

1. கலாவிகம், 2. சுக்கிராங்கம், 3. மலபுக், 4. தார்க்கியன், 5. வலாகம், 6. பாடலாங்கிரி, 7. கலிங்கம், 8. காகாரி, 9. பங்காளி, 10. சிமிகம், 11. சிரல், 12. சுபன்னன், 13. பரவிருதயம், 14. மசாகம், 15. மேதாவினி, 16. வண்டானம்.

1. கோழி, 2. மயில், 3. காகம், 4. கருடன், 5. கொக்கு, 6. புறா, 7. வானம்பாடி, 8. ஆந்தை, 9. வௌவால், 10. கிளி, 11. மீன்கொத்தி, 12. சேவல், 13. குயில், 14. குருவி, 15. மைனா, 16. நாரை.

கீழ்க் காணும் பெயர்கள் தேவியர்களைக் குறிக்கின்றன. எந்தப் பெயர் யாருக்கு உரியது என்று தெரிகிறதா ?

1. அகாத்துமசை, 2. ஐந்தவி, 3. புலோமசை, 4. அம்பணத்தி, 5. கலதி, 6. கோகனதை, 7. சண்பனி, 8. புவாகஜை, 9. மகீசுதை, 10. மதனேற்சவை.

1. பார்வதி, 2. சரஸ்வதி, 3. இந்திராணி, 4. துர்க்கை, 5. பூதேவி, 6. இலட்சுமி, 7. காளி, 8. ரதி, 9. சீதை, 10. ரம்பை.

இவை மாதங்களின் வேறு பெயர்கள். எது எந்த மாதத்தின் பெயர் என்று தெரிகிறதா ?

1. மது, 2. மாதவம், 3. சுக்கிரம், 4. சுசி, 5. நபம், 6. வாருணி, 7. ஆசுவிகம், 8. வைர்ச்சம் 9. கோவீண, 10. தைடம், 11 தபம் 12. பாற்குனிகம்.

1. சித்திரை, 2. வைகாசி, 3. ஆனி, 4. ஆடி, 5. ஆவணி, 6. புரட்டாசி, 7. ஐப்பசி, 8. கார்த்திகை, 9. மார்கழி, 10. தை, 11. மாசி, 12. பங்குனி.

இவை திசைகளைக் குறிக்கும் பெயர்கள். எது எந்தத் திசை என்று கண்டுபிடிக்க முடிகிறதா ?

1. பிராசி, 2. கணங்கம், 3. அவாசி, 4. நிருதி, 5. சரமம், 6. வாயவி, 7. பிங்கலம், 8. மாரிக்குடா.

1. கிழக்கு, 2. தென்கிழக்கு, 3. தெற்கு, 4. தென்மேற்கு, 5. மேற்கு, 6. வடமேற்கு, 7. வடக்கு, 8. வடகிழக்கு.

கீழ்க்காணும் பெயர்கள் தேவர்களைக் குறிக்கின்றன. எந்தப் பெயர் யாருக்கு உரியது என்று தெரிகிறதா ?

1. தூர்ச்சடி, 2. மணிசேகரம், 3. பவனுத்துமசன், 4. சேவணு வரசன், 5. கோமரம், 6. பயித்தியகாரகன், 7. தரிசனிபத்து, 8. முசிகுந்தன், 9. முற்கரவன், 10. ஆத்துமபூ, 11. சிதகன், 12. ஒரு காலிலி, 13. திரிதாயன், 14. கைடவாரி, 15. குக்குடத்துவசன், 16. கஞ்சாரி.

1. சிவன், 2. யமன், 3. அக்கினி, 4. வருணன், 5. இந்திரன், 6. சூரியன், 7. சந்திரன், 8. பிரம்மா, 9. குபேரன், 10. மன்மதன், 11. சுக்கிரன், 12. சனி, 13. விநாயகர், 14. விஷ்ணு, 15. முருகன், 16. கண்ணன்.

தொகுப்பு : எஸ். என். கே. ராஜன் ஆதாரம் : தமிழ்ப் பேரகராதி

வயிறு நிறைய வாழைப்பழம் வேண்டுமா?

கிருஷ்ணவேணி

கிட்டுவையும் பட்டுவையும் தெரியுமா உங்களுக்கு? அவர்களோடு அவர்களுடைய தாத்தா பரமேசுவரனையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாரும் ஈசுவரன் என்றுதான் அவரைக் கூப்பிடுவார்கள். கம்பீரமான உயர்ந்த உருவம், நீண்ட மூக்கு, சிரித்த முகம், அன்பு ததும்பும் கண்கள் இதுதான் ஈசுவரன். அவரிடம் ஓர் அபூர்வமான மெழுகு இருக்கிறது. அது மந்திர சக்தி வாய்ந்தது. அதில் ஒரு கடுகளவு எடுத்துப் புருவத்தில் தீற்றிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டால் போதும். நினைத்த இடத்தில் நீங்கள் இருப்பீர்கள். கார், ரயில், கப்பல், விமானம் ஆகியவற்றின் உதவி இல்லாமலே உலகின் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் போகலாம்.

கிட்டுவும் பட்டுவும் ஈசுவரன் தாத்தாவுக்கு ரொம்பப் பிரியமான பேரக் குழந்தைகள். கிட்டுதான் மூத்தவன். அவனுடைய அருமைத் தங்கை பட்டு. இருவரும் ரொம்ப ரொம்பச் சூடிகையானவர்கள். அவர்களுக்கு ஊர் உலகமெல்லாம் சுற்ற வேண்டும் என்பதில் ரொம்ப ரொம்ப ஆசை. அவர்கள் ஆசையைத் தாத்தா நிறைவேற்றி வைக்கத் தயங்கவே மாட்டார். மந்திர மெழுகைத் துளி எடுத்துப் பேரக் குழந்தைகளின் புருவங்களில் தடவித் தாமும் தடவிக் கொள்ளுவார். போக வேண்டிய இடத்தை நினைத்துக் கண்களை மூடிக் கொள்ளுவார்கள். **'ஜலாம்!'** அடுத்த விநாடி அவர்கள் விரும்பிய அவ்விடத்தில் இருப்பார்கள்.

இப்படித்தான் ஒரு நாள் கிட்டுவும் பட்டுவும் வாழைப் பழத்துக்காகச் சண்டை போட்டுக் கொண்டார்கள். கிட்டுவிடம் மலை வாழைப்பழம் இருந்தது. பட்டுவிடமோ ஸ்படிகம் போன்ற மணல் சீனி இருந்தது. சர்க்கரையில் பழத்தை அழுத்தித் தின்றால் எப்படி இருக்கும்? ஆனால் பட்டு 'சர்க்கரையைக் கொடுக்க மாட்டேன்' என்றாள். கிட்டு அவளுக்குப் பழத்தைத் தருவானா? இவர்கள் புகைச்சலைப் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தார் ஈசுவரன். ''கரும்பும் வாழையும் கணக்கின்றி விளையும் நாட்டுக்குப் போனால் இப்படிச் சண்டை போட மாட்டீர்களில்லையா?'' என்று கேட்டார் தாத்தா.

''அது எந்த நாடு? வாழையும் கரும்பும் வளமாக விளையும் நாடு?'' என்று கேட்டாள் பட்டு.

''ஜமைக்கா என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''ஓ, தெரியுமே! ஐக்கிய அமெரிக்காவின் மண்ணையெல்லாம் உலகின் மிகப் பெரிய ஒரு நதி மெக்ஸிகோ வளைகுடாவில் கொண்டுவந்து கொட்டுகிறதே! அங்கிருந்து தென் கிழக்கில் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிறது ஜமைக்காத் தீவு'' என்றான் கிட்டு. பூகோளத்திலும் சரித்திரத்திலும் அவன் புலி.

''மெக்ஸிகோ வளைகுடாவில் சங்கமமாகும் அந்தப் பெரிய நதியின் பெயர் என்ன என்று நீ சொல்லு பட்டு!'' என்றார் தாத்தா.

''இது தெரியாதாக்கும். மிஸிஸிபி'' என்றாள். அண்ணாவுக்கு எந்த விதத்திலும் அவள் சளைத்தவளில்லையே.

''சரி. நாம் இப்போது ஜமைக்காவுக்கு ஜானு!'' என்றார் தாத்தா தமது மெழுகு டப்பாவைத் திறந்துகொண்டே. உடனே கிட்டுவின் வாழைப் பழத்தில் பாதி பட்டுவுக்கும் பட்டுவின் சர்க்கரையில் பாதி கிட்டுவுக்கும் கைமாறின. இருவரின் புருவத்திலும் மந்திர மையைத் தடவினார் ஈசுவரன்.

ஜலாம்...! அடுத்த விநாடி...

மூவரும் ஜமைக்காவின் வளமான வாழைத் தோட்டத்தில் இருந்தார்கள்.

''அப்பாடி, எத்தனை பெரிய வாழைத் தார்...! எவ்வளவு பெரிய பழங்கள்..!'' என்று வியந்து போனான் கிட்டு.

தூரத்தில் துள்ள வைக்கும் சங்கீத ஒலி கேட்டது. பட்டுவின் கால்கள் அவளை அறியாமலே தாளம் போட்டன. உடலில் ஒரு துள்ளல் உண்டாயிற்று. 'தம்தம்தம்' என்று டிரம் ஒலியோடு 'சிக்சிக்சிக்' என்று குடுவைக்குள் மணிகளைப் போட்டுக் குலுக்குவது போன்ற ஒலியும் பாட்டும் ஏதோ ஒரு விதத்தில் மயங்க வைப்பது போல் இருந்தன.

''ஜமைக்காக்காரர்கள் பாட்டு, ஆட்டம் இவைகளை விரும்புகிறவர்களான மக்கள். இவர்களது பாட்டுக்கு காலிப்ஸோ **(calypso)** என்று பெயர். உலகப் பிரசித்தி பெற்றது'' என்றார் தாத்தா. தொடர்ந்து அந்தத் தீவைப் பற்றிய விவரங்களைக் கூறலானார்.



மிஸிஸிபி மாகாணத்தில் பத்தில் ஒரு பங்குதான் இந்த ஜமைக்காத் தீவின் விஸ்தீரணம். ஆனால் இந்தத் தீவில் வசிப்பவர்களின் ஜனத்தொகை மிஸிஸிபி மாகாணத்தைப் போலத்தான்.

ஸ்பெயின் தேசத்து ராணி இஸபெல்லா கொலம்பஸிடம் 'ஜமைக்காத் தீவு எப்படி இருக்கும்?' என்று கேட்டபோது அவர் ஒரு காகிதத்தைக் கசக்கி மேஜையின்மீது போட்டு "இப்படித்தான் இருக்கிறது அந்தத் தீவு!" என்றாராம். பொருத்தமான உபமானம்தான். ஜமைக்காத் தீவு கரடு முரடானது. மலைகள் மிகுந்தது. பள்ளத்தாக்குகளையும் அடர்ந்த காடுகளையும் நீலமலைச் சிகரங்களையும் கொண்டது. தென் அமெரிக்க இந்தியர்களான ஆதிவாசிகள் இந்தத் தீவை க்ஸேமாகா **(Xaymaca)** என்று அழைத்தார்கள். இதற்கு மரங்களும் நீரும் நிறைந்த நாடு என்று பொருள். இதிலிருந்துதான் ஜமைக்கா பிறந்தது. ஜமைக்கா கரிபியன் கடலில் க்யூபாவிலிருந்து தெற்கே 90 மைலில், ப்ளோரிடாவுக்குத் தென்கிழக்கே 180 மைலில் உள்ளது. கிழக்கு மேற்காக இதன் நீளம் 146 மைல்கள். தென் வடலில் 51 மைல்கள். மொத்தப் பரப்பளவு 4,411 சதுர மைல்கள். 1494ல் இத்தீவைக் கொலம்பஸ் கண்டுபிடித்தார். பதினேழாம் நூற்றாண்டில் இது பிரிட்டிஷாரின் ஆளுகையின் கீழ் வந்தது.

"ஐக்கிய அமெரிக்கா, கானடா இங்கிருந்தெல்லாம் சுற்றுலாப் பிரயாணிகள் இங்கு அடிக்கடி வருகிறார்கள். காரணம் இது அவர்களுக்கு மிக அருகேயுள்ள உஷ்ண மண்டலத் தீவு. உல்லாசப் பிரயாணிகள் அதிகமாக வரும் மாதங்கள் டிசம்பரிலிருந்து ஏப்ரல்வரை. உறைபனி உதிரும் ஊரைச் சேர்ந்த அமெரிக்க, கனடாக்காரர்களுக்கு ஜமைக்காவின் கதகதப்பு இதமாக இருக்கும். நம் ஊரைப் போலவே இங்கும்கூட ஒரு நீலகிரி இருக்கிறது.' ப்ளூ மவுண்டன் என்ற இதன் சிகரம் கடல் மட்டத்திலிருந்து 7,402 அடி உயரத்தில் உள்ளது."

"ஜமைக்காவின் தலைநகரம் எது தாத்தா?"

"கிங்ஸ்டன். கடற்கரையை ஒட்டியுள்ளது. வருஷத்தின் மிகக் குளி



ரான இரவுகளில் கூடத் தர்மாமீடர் இங்கு 57 டிகிரி பாரன்ஹீட்டுக்குக் கீழே போனதே கிடையாது. தினம் 90 டிகிரி பாரன்ஹீட்டைத்தான் தர்மா மீடர் காட்டும். வடக்குக் கடற்கரையி லிருந்து எப்போதும் கடற் காற்று வீசு வதால் வெப்பம் அவ்வளவாகத் தெரிவ தில்லை.''

''இங்கு வாழ்பவர்கள் இந்தத் தீவின் பூர்வ குடிமக்களா தாத்தா?'' என்று கேட்டாள் பட்டு.

''இல்லை'' என்றார் தாத்தா. ''450 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களின் சந்ததியார்கள் இல்லை இவர்கள். ஐரோப்பியர்கள் இந்தத் தீவுக்குக் குடியேறியபோது தங்களுடன் ஏராள மான கிருமிகளையும் வியாதிகளையும் கொண்டு வந்து இங்கு இறக்குமதி செய் தார்கள். அதனால் இங்கிருந்த அர கான் என்ற ஆதிவாசிகள் அநேகமாக அழிந்தே போனார்கள். அவர்கள் மொழியிலிருந்து வந்த வார்த்தைகள் தான் ஆங்கிலத்தில் உள்ள 'ஹரிகேன்' (புயல்) கானோயி (படகு) புக்கானீர் (கடற் கொள்ளைக்காரன்.) பார்பெகூ (மாமிசத்தை வாட்டும் சாதனம்) ஆகி யவை.''

''அப்படியானால் இப்பொழுதுள்ள ஜமைக்காக்காரர்கள் எல்லாம் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்?'' என்று கேட்டான் கிட்டு.

''இவர்களைப் பார்த்தால் தெரிய வில்லை? யார் மாதிரி இருக்கிறார்கள்?''


''நீக்ரோக்களைப் போல். ஆனால் முழுக்கவும் அப்படி இல்லை. அந்தக் கருப்பு இல்லை. ஒருவித செங்கருப்பு நிற மாக இருக்கிறார்கள்.''

''அந்தக் காலத்தில் மேற்கு ஆப் பிரிக்காவிலிருந்து அடிமைகளாக இங்கு கொண்டு வரப்பட்ட நீக்ரோக்களின் வழி வந்தவர்கள்தான் இன்றைய ஜமைக்காக்காரர்கள்.''

''ஆங்கிலேயப் பண்ணை முதலாளிகள் மலையடிவாரத்தில் மரத்தினாலான அழ கிய வீடுகளைக் கட்டிக் கொண்டார்கள். பண்ணையில் நீக்ரோ அடிமைகள் கரும்பு விளைவித்து அறுவடை செய்து காசைக் குவித்தார்கள், தங்கள் வெள்ளை எஜ மானர்களுக்கு. ஜமைக்காவில் கரும்பு ஏராளம். எக்கச்சக்கமாக விளைகிறது.''

''இங்கு விளையும் கரும்பிலிருந்து சர்க்கரை தயாரித்து எங்கு அனுப்பு கிறார்கள் தாத்தா?''

''எங்கு அனுப்புவார்கள்? பிரிட்ட னுக்குத்தான். சர்க்கரை தயாரிக்கும் போது உபபொருளாக ஒருவகை 'ரம்' மதுவையும் தயாரிக்கிறார்கள்.''



''நமக்கு வேண்டாம் தாத்தா. நாம் அந்த மாதிரி உல்லாசப் பிரயாணிகள் இல்லே. உண்மை அறிய வந்தவர்கள்'' என்றுள் பட்டு. தாத்தா சிரித்தார்.

''அடிமைத்தனம் அமெரிக்காவில் ஒழிந்ததற்கு முன்னுலேயே ஜமைக்கா வில் மறைந்து விட்டது. அதேபோல் அழகிய மர விடுகளும் கரையான் களுக்கு இரையாகி ஒழிந்து போயின. பெரிய பண்ணைகளுக்குப் பதில் இப் போது ஜமைக்காவில் சுமார் இரண்டு லட்சம் சிறிய பண்ணைகள் இருக்கின்றன. மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைக ளாக வந்து தங்கிவிட்ட இன்றைய ஜமைக்காக்காரர்கள் இந்தப் பண்ணை யில் இன்றும் கரும்பு பயிர் செய்கி ருர்கள். அன்றைய உற்பத்தியைவிட இன்று இருபது மடங்கு அதிக உற் பத்தி.''

கிட்டுவும் பட்டுவும் தாத்தாவும் ஜமைக்காவின் கரும்புத் தோட்டங் களைப் பார்த்துக் கொண்டு சர்க்கரைத் தொழிற்சாலைக்குப் போய் அப்படியே வாழைத்தோட்டத்துக்கும் போனுர்கள். வாழையின் செழிப்பைக் கண்டு கிட்டு வும் பட்டுவும் மயங்கினுர்கள். வாழைப் பழத்தை உரித்துச் சாப்பிட்டபோது, ஏனே அவர்கள் முகத்தில் ஓர் ஏமாற்றம்.


''என்ன இருந்தாலும் நம்ம ஊர்ச் சிறுமலைப் பழத்தின் ருசி வராது'' என் ருன் கிட்டு.


''அது உன் நாட்டுப்பற்றைக் காட்டு கிறது'' என்ருர் தாத்தா, ''இங்கிருந்து வருஷத்தில் எத்தனை தார்கள் தெரியுமா அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்றுமதியாகின்றன? பத்து மில்லியன் தார்கள். ஒவ்வொரு தாரையும் பாலி தீன் பையில் போட்டுக் கட்டிக் கப்பலில் ஏற்றுகிருர்கள்.


''ஜமைக்காவின் கடற்கரையை ஒட் டிய குறுகலான சமவெளிகளிலும் உள் நாட்டில் மலைச் சரிவை அடுத்த பள்ளத் தாக்குகளிலும் கரும்பும் வாழையும் கணக்கின்றிப் பயிராகின்றன. உள் நாட்டின் பள்ளத்தாக்குத்தான் மிகச் செழிப்பான மண் வளம் உடையது. மலையிலிருந்து மாரிக் காலங்களில் புதிய மண் அடிக்கடி இந்தப் பகுதியில் வந்து சேருவதே இதற்குக் காரணம்.''

''வாழையும் கரும்பும் தவிர வேறு ஒன்றும் கிடையாதா தா்த்தா இங்கு?'' என்று கேட்டான் கிட்டு.

''உண்டு. ஆனுல் அதைக் கண்டு பிடித்தது சமீபத்தில்தான். இரண்டாம் உலகப் போரின்போது ஒரு விவசாயி தன் பசுக்கள் அடிக்கடி நோய்வாய்ப் படுவதைக் கண்டு கவலையடைந்து இங்








மன்னித்தேன், போ!

வெகுகாலத்துக்கு முன்பு சைதாப்பேட்டையில் சின்னன் என்னும் வண்ணான் ஒருவன் வசித்து வந்தான். அவன் துணிகளை நன்கு வெண்மையாகச் சலவை செய்வான். அதனால் நகரில் உள்ள மக்கள் யாவரும் அவனிடமே தங்கள் துணிகளைப் போட்டனர். இவ்வாறு நாளுக்கு நாள் அவனிடம் வரும் துணிகளின் எண்ணிக்கை மிகுந்தது.

சின்னனிடம் ஒரு கழுதை இருந்தது. அவன் ஆற்றுக்கு அக்கழுதை மீதே துணிகளை ஏற்றிச் செல்வான். கழுதைக்குச் சுமை கூடிக் கொண்டே வந்தது. நண்பகல். உச்சியில் சூரியன் தனது வெம்மையான கிரணங்களை வீசும் பொழுதும் அவன் அக்கழுதையின் மீது பெருஞ்சுமைகளை ஏற்றிச் செல்வான். இதனால் கழுதைக்குச் சங்கடமாக இருந்தது. அது ஒரு நாள் வண்ணானிடமிருந்து ஓடிவிட வேண்டும் என்று தீர்மானித்தது.

ஆனால் அது எங்கும் ஓடிவிடாதபடி ஆற்றில் கொண்டு சுமையை இறக்கியதும் அவன் அதன் காலைச் சிறு கயிற்றினால் கட்டுவான். அப்பொழுது கழுதை வண்ணான் தன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறான் என்று எண்ணிக் கொள்ளும். ''காலில் விழுந்தா மன்னிப்புக் கேட்கிறாய்! சரி, இந்தத் தடவை மன்னித்தேன் போ! இனியாவது ஒழுங்காக இரு'' என்று தனக்குள் சொல்லிக் கொள்ளும். சின்னன் தினமும் அவ்வாறே கழுதையின் காலைப் பிடித்துக் கட்டிப் போட்டு வருவான். கழுதையும் தினமும் அவன் தன் காலில் விழுவதாக எண்ணி அவனை மன்னித்துக் கொண்டே இருந்தது!

— தம்பிதுரை



இருந்து மண்ணை அமெரிக்காவுக்கு அனுப்பினான் சோதனைக்கு. சோதனையில் இந்த மண்ணில் நிறைய பாக்ஸைட் இருப்பது தெரிய வந்தது. இந்தப் பாக்ஸைட் என்ற தாதுப்பொருள் கால் நடைகளுக்கு 'விரோதமானது. அதாவது விஷப் பொருள்.''

''பாக்ஸைட்டிலிருந்துதானே தாத்தா அலுமினியம் என்ற உலோகம் கிடைக்கிறது?'' என்று கேட்டான் கிட்டு.

'' ஆமாம். ஒரு விவசாயி எதற்காகவோ மண்ணைச் சோதனைக்கு அனுப்ப உலகிலேயே மிகப் பெரிய பாக்ஸைட் சுரங்கமாக ஜமைக்காவை விஞ்ஞானிகள் கண்டார்கள். சர்க்கரை, வாழை இவைகளின் ஏற்றுமதியைப் போல் இரு மடங்கு பாக்ஸைட் தாது ஏற்றுமதியினால் ஜமைக்காவுக்கு லாபம் கிடைக்கிறது. வாருங்கள் அலுமினியச் சுரங்கத்தைப் பார்த்து விட்டு ஊருக்குத் திரும்புவோம்'' என்று கிட்டுவையும் பட்டுவையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார் பரமேசுவரத் தாத்தா.

''தாத்தா! இந்தத் தீவில் வாழும் மிருகங்கள், பறவைகள் என்னென்ன என்று நீங்கள் சொல்லவில்லையே?'' என்று கேட்டாள் பட்டு.

''அகோட்டி (Agouti) என்று ஒரு வகை மிருகம் இங்கு அதிகம். ஒரு காலத்தில் இந்தத் தீவில் ஏராளமான முதலைகள் இருந்தனவாம். அடிக்கடி வேட்டைக்காரர்களுக்குப் பலியான அவை இப்போது இங்கு மறைந்து வருகின்றன. கிளிப்பிள்ளைகள் ஏராளம். பறவைகளில் கிளி, பாராகீட், நீல பாட்ரிட்ஜ், காட்டு வாத்து, தேன் சிட்டுகள் ஆகியவை விசேஷமானவை.''

''ஜமைக்காவின் தேசியக் கொடி எப்படி இருக்கும் தாத்தா?'' என்று கேட்டான் கிட்டு.

''புதிய சுதந்திர தேசிய ஜமைக்காவின் கொடியில் கறுப்பு, தங்க நிறம், பச்சை ஆகியவை உண்டு. கறுப்பு கடினமான வாழ்வையும், தங்க நிறம் சூரிய ஒளி, இயற்கைச் செல்வங்களையும் பசுமை நம்பிக்கை, வேளாண்மை ஆகியவற்றையும் உருவகப் படுத்துகின்றனவாம்'' என்று விளக்கிய தாத்தா குழந்தைகளின் புருவத்தில் தீற்றியிருந்த மந்திர மெழுகை அழுத்தித் துடைத்தார். என்ன ஆச்சரியம்! அடுத்த விநாடி அவர்கள் தங்கள் வீட்டின் அறையில் உட்கார்ந்திருந்தார்கள். ''ஜமைக்காப் பிரயாணம் எப்படி?'' என்று கேட்டார் தாத்தா.

''பலே ஜோர்'' என்றார்கள் கிட்டுவும் பட்டுவும்.

நாய்க்குட்டி

வெள்ளை வெள்ளை நாய்க்குட்டி
குள்ளமான நாய்க்குட்டி
மெள்ள ''தோ தோ'' என்றதும்
துள்ளி வரும் நாய்க்குட்டி

ரொட்டித் துண்டு காட்டினால்
கிட்ட வந்து கவ்விடும்
பட்டுப் போன்ற உடலில் கை
பட்ட உடன் நெளிந்திடும்

கன்னங் கரிய விழிகளில்
கனிந்த நன்றி காட்டிடும்
சன்ன மான நாக்கினால்
மென்மை யாக நக்கிடும்

குழந்தை தன்னைக் காத்திடும்
குழைந்து வாலை ஆட்டிடும்
கூழைக் கல்லை எடுத்திட்டால்
குரைத்துக்கொண்டு ஓடிடும்!

—ஜீ. எத்திராஜ்



வேப்பமரம்

செம்மல்

புதிய வருடப் பிறப்பன்று
புசிக்கும் வேப்பம் பூரசந்தான்
எதிலும் கசப்பும் இனிப்புண்டாம்
என்பதை நாமும் உணர்கின்றோம்!

உலகே கருகும் வெயிலிலும்
உடலும் உள்ளமும் குளிரிட
இலகும் பச்சைப் பந்தலிட்டே
இன்ப நிழலைத் தரும்வேம்பே!

பூவும் காயும் கசந்திடினும்,
பொன்னும் கொழுந்தும் கசந்திடினும்
நோவும் நச்சும் தீர்க்கின்ற
நுட்ப மருந்தும் வேம்பன்றோ!

காப்பாய் வீடு மனைசெழிக்க
கண்படு 'திருஷ்டி' தனைக் கழிக்க
வேப்பிலைக் கொத்தின் பிடியன்றோ
விளங்கும் மந்திரக் கட்சமமாய்!

கோடிக் கணக்காம் மக்களிலே
கும்பிடத் தக்கவர் ஒருவரே!
மூடிக் கிடக்கும் காட்டிலும்
முளைக்கும் வேம்பும் இரண்டொன்றே!

பூசை செய்தே தொழுவதிலும்,
புனிதம் என்றே புகழ்வதிலும்,
ஆசை கொண்டே வேம்பதனை
அழகாய் வளர்த்தல் நலமாகும்!



பூனை

கறுப்பு நிறப் பூனை ஒன்று
காலைச் சுற்றி வருகுது
அடுப்பங்கரை அருகில் சென்று
அங்குமிங்கும் பார்க்குது!

எட்டிடாத உறியை அது
எட்டி எட்டிப் பிடிக்குது
சட்டிப் பானை அத்தனையும்
சரிக்கக் கீழே சாய்க்குது!

மிச்ச மீதி அத்தனையும்
எச்சிலாக்கி வைக்குது
அச்சமின்றி அந்தப் பூனை
அட்டகாசம் செய்குது!

சுண்டெலியைக் கண்டவுடன்
சுத்திச் சுத்தி வருகுது
குண்டு பூனை கோலெடுத்தால்
குடுகுடுன்னு ஓடுது!

வீ. மகாலட்சுமி

8
கதை வாண்டுமாமா
ஷீலாவைக் காணோம்-
சித்திரம் ரமணி..
திடீரென்று மேகங்கள் ஒன்று திரண்டன. மழை கொட்ட ஆரம்பித்தது...
டைகர்.. அதோ அந்தப் பாதையில் பார்.. ஐயோ அந்தக் கார்.. அந்த அயோக்கியர் களுடையது போலல்லவா இருக்கிறது?
என்ன இங்கேயே புதர் மறைவில் ஒளிந்திருக்கச் சொல் லுகிறயா? அவர்களை நீ திசை திருப்பி இழுத் துச் செல்லப் போகி றயா? சரி, சீக்கிரம் திரும்பி விடு..
அவர்கள் முன்னிலையில் தானாகவே போய் அவர்கள் கவனத்தைக் கவருகிறது டைகர்.
அதோ அந்த நாய்.. விடாதே. அந்தப் பெண்ணும் இதனுடன் தான் இருக்கும்.
அவ்விருவரையும் ஷீலா மறைந்திருக்கும் இடத்திலிருந்து எதிர்த் திசையில் இழுத்துச் செல்லுகிறது டைகர்...
அந்த மலைப் பாதையில் அவர்களை வெகு தூரம் இழுத்தடித்த டைகர் ஓர் இடத்தில் எதிரிலுள்ள ஒரு பாறைக்குத் தாவியது.


நாயானாலும் நமக்கு ஈடு கொடுக்கிறதே. இத்தனை அறிவுள்ள நாயை நான் பார்த்ததே இல்லை.
உன் பாராட்டு போதும். அந்த அறிவு நமக்கு ஆபத்து. அதைத் தொடர்ந்து பிடித்தாக வேண்டும்.
அவர்களைத் ... போலத் தாவ முடியுமா? எதிர் மலைக்குப் போகத் தடம் பிடித்துக் கீழே இறங்குகிறார்கள். அதே சமயம் டைகர் தான் இருக்கும் இடத்திலிருந்து பெரும் கற்களை...
..உருட்டிக் கீழே தள்ளியது. டைகரைப் பிடிக்க வரும் அவர்கள் மீது நீர் மழையோடு கல் மழையும் பொழியவே....
ஐயோ செத்தோம்.. எத்தனை பெரிய கற்கள்...
நல்ல வேளை மயிரிழையில் தப்பினோம்..
அவர்கள் மீது கற்களை உருட்டி விட்டு ஷீலா இருக்குமிடம் ஓடி வந்த டைகர் மழைச் சாரலில் நடுங்கியபடி நிற்கும் அவளுக்கு அந்த அயோக்கியர்களின் காரிலிருந்தே ஒரு போர்வையைக் கௌவி இழுத்து.....
.. தொடுத்து ஷீலாவைப் போர்த்திக் கொள்ளச் சொல்லுகிறது..
டைகர், இனி அவர்களைக் கவனிக்காதே. மழையிலிருந்தும் அவர்களிடமிருந்தும் தப்பிப் பாதுகாப்பான இடமாகத் தேடி ஓட வேண்டும்...
தொடரும்..



உலோகம் என்றால் என்ன?

உலோகம் என்பது என்ன என்று நிர்ணயிப்பது சுலபமல்ல. இயற்கையாக உலோகம் என்ற பொருளுக்கு ஒளிவிடும் பளபளப்புத் தன்மையும் உஷ்ணம், மின்சாரம் இவைகளைக் கடத்தும் குணமும் இருக்கும். உறுதி, அடர்த்தி, விரிவடையும் தன்மை, நீளும் குணம் ஆகியவை ஓர் உலோகத்துக்கும் மற்றோர் உலோகத்துக்கும் வேறுபட்டவை. ஒரு குறிப்பிட்ட கொதி நிலையில் உருகும் தன்மையும், மற்ற உலோகங்களோடு கலந்து 'அல்லாய்' உண்டாக்கும் குணமும் உலோகங்களுக்கு உண்டு. பாதரஸத்தைத் தவிர மற்ற உலோகங்களெல்லாம் சாதாரண உஷ்ண நிலையில் திட ரூபமாகவே இருக்கும்.

சில உலோகங்கள் சுத்தமான நிலையிலேயே கிடைக்கும். ஆனால் அநேகமாக எல்லா உலோகங்களும் வேறுபல பொருள்களுடன் கலந்தே காணப்படுகின்றன. இத்தகைய உலோகங்கள் ஸல்பைடுகள், ஆக்ஸைடுகள், கார்போனேட்டுகள் ஸிலிகேட்டுகள் ஆகியவைகளுடன் கலந்த கலவைகளாகக் கிடைக்கும். கனிஜங்களுக்குத் துத்தநாகம், இரும்பு, தாமிரம், க்ரோமியம், நிக்கல், பாதரசம் ஆகியவைகளை உதாரணங்களாகக் கூறலாம். பல டன் எடையுள்ள தாதுக்களை வடித்து மிகக் குறைந்த அளவு உலோகத்தைப் பிரித்தெடுப்பார்கள். இவை அபூர்வமான உலோகங்கள். உதாரணம் ரேடியம். ஓர் உலோகத்தை அதன் கனிஜத்திலிருந்து பிரித்தெடுப்பதற்கு 'மெட்டலர்ஜி' என்று பெயர். பல உலோகங்கள் அதன் சுத்தமான நிலையில் விரும்பத் தகாத குணங்களைக் கொண்டதாக இருக்கும். ஆகவே பொதுவாக அவைகளைக் கலப்பு உலோகங்களாகத்தான் நாம் நடைமுறையில் உபயோகிக்கிறோம். உதாரணம், தங்கம், வெள்ளி, அலுமினியம் ஆகியவை. சுத்தமான இரும்புக்கு மதிப்புக் கிடையாது. அது மிருதுவானது. அதற்கு உறுதிக் குணம் ஏற்பட அதை ஸ்டீலாக மாற்ற வேண்டும். ஸ்டீல் ஓர் உலோகக் கலப்பாகும்.

சில உலோகங்கள் மிகக் குறைந்த அளவில் ஜீவராசிகள் உயிர் வாழ்வதற்கு உணவாகப் பயன்படுகின்றன. பொட்டாசியம், கால்ஸியம், மக்னீசியம், சோடியம் ஆகியவை முக்கியமானவை.

நாய்கள் எலும்பைப் புதைப்பது ஏன்?

வீட்டுப் பிராணிகள் பலவற்றில் நாய்தான் ஆதிமனிதனின் முதல் தோழனாகப் பழகி வந்துள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உடலில் மயிர் அடர்ந்த யானைகளான 'மாமத்'துக்கள் உலவி வந்தபோது ஆதிமனிதன் குகைவாசியாக வாழ்ந்தபோது, நாயும் அவனுடன் தோழமை கொண்டிருந்திருக்கிறது. ஆதி நாய்கள் எப்படித் தோன்றின என்பதற்கு ஆராய்ச்சியாளர்களிடமிருந்து சரியான விளக்கம் கிடைக்கவில்லை. ஓநாய், குள்ளநரி இவைகளின் கூட்டில் உண்டானது நாய் இனம் என்கிறார்கள் சிலர்.

இன்றையப் பிராணிகளின் சில செயல்கள் இன்றையச் சூழ்நிலைக்குத் தேவையற்றவையாக, பயனில்லாதவையாக இருக்கலாம். ஆனால் அவைகளின் அன்றைய மூதாதையருக்கு அந்தச் செயல்கள் வாழ்வுக்கு அவசியமுடையவைகளாக இருந்திருக்கும். பல்லாயிரம் ஆண்டுகள் ஆன பின்னரும் இத்தகைய சில பழக்கங்கள் மறைந்து போகாமல் தொடர்ந்து வந்துள்ளன.

இன்றைய நாய் எலும்பைக் குழி தோண்டிப் புதைப்பானேன்? அன்றைய நாய்களுக்கு மனிதன் சரியானபடி உணவு படைத்திருக்க மாட்டான். ஆகவே அவை தேவைப்படும்போது எடுத்துக் கொள்ள இப்படி எலும்புகளைச் சேமித்து வைத்துக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம். தூங்குவதற்குப் படுத்துக் கொள்ளு முன் நாய்கள் மூன்று முறை தங்களைத் தாங்களே சுற்றிச் சுற்றி வரும். இது ஏன்? ஆதி நாய்கள் கானகத்தில் காட்டு இலைகளையோ புற்களையோ தட்டிக்கொட்டி மிதித்துத் துவைத்துத் தூங்குவதற்கு ஏற்றபடி படுக்கை தயார் செய்து கொண்டிருக்கும். அந்தப் பழக்கமே இன்றும் தொடருகிறது. இரவு வேளைகளில் நாய்கள் நிலவைப் பார்த்து ஊளையிடுவானேன்? ஆதி நாய்கள் ஓநாயைப் போலக் கூட்டமாக இடம் பெயரும்போது ஊளையிட்டதன் பழக்கமே இது. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற பழமொழி ஏற்பட்டதன் காரணம் புரிகிறதல்லவா?





நாம் ஏன் நீர் அருந்துகிறோம்?

மனித உடலில் 60 சத விகிதம் நீரால் ஆனதுதான். எலுமிச்சையைப் பிழிவது போல் நம் உடலைப் பிழிந்தால் பதினொரு காலன் தண்ணீர் கிடைக்கும். இது சாதாரணத் தண்ணீர் போன்றதல்ல. இதில் கலந்துள்ள பொருள்களினால் இந்நீர் உடல் உயிரோடிருப்பதற்கு ஏற்றதாக இருக்கிறது. இதில் ஒரு காலன் தண்ணீர் ரத்தத்தோடு கலந்துள்ளது. இருதயத்திலிருந்து முழுதும் பரவிப் பாய இது பயன்படுகிறது. ரத்தம் நம் உடலில் ஒவ்வொரு பாகத்திலும் தொடர்ந்து பாய்ந்து கொண்டிருக்க இந்த நீர் உதவுகிறது. உடலின் வெப்பத்தைச் சமநிலைப்படுத்தும் கடத்தியாகவும் நீர் உதவுகிறது.

ஒரு நாள் நாம் தண்ணீரே குடிக்காவிட்டாலும்கூட, நாம் சாப்பிடும் திட உணவிலிருந்து ஒரு கால் காலன் நீர் நமக்குக் கிடைக்கிறது. பழங்கள், காய்கறிகள், ரொட்டி, இறைச்சி ஆகியவைகளைச் சாப்பிடும் நமக்குத் தண்ணீர் கிடைத்துவிடும். ஏனென்றால் இவைகளில் 30 லிருந்து 90 சதவிகிதம் வரையில் நீர் இருக்கிறது. இவை தவிர ஒரு சராசரி மனிதன் திரவ நிலையில் இரண்டு 'க்வார்ட்' (அரைக் காலன்) தண்ணீரைப் பெறுகிறான். ஒரு நாளில் சுமார் பத்து க்வார்ட் (இரண்டரைக் காலன்) தண்ணீர் உடம்பினுள் பல்வேறு உறுப்புக்களின் வழியாகப் பயணம் செய்தபடி இருக்கிறது.

ரத்தத்தில் உள்ள தண்ணீர் எப்போதும் ஒரே அளவாகத்தான் இருக்கும். கடுங் கோடையில் வியர்வை பெருக்கெடுக்க நீ களைத்துப் போகும்போது கூட ரத்தத்தில் உள்ள தண்ணீரின் அளவு மாறுபடுவதில்லை. நீ ஏராளமான தண்ணீரைக் குடித்தாலும் கூட ரத்தத்தில் உள்ள நீரின் அளவு கூடுவதில்லை. அப்படியானால் உடலுக்குத் தேவையானது போக அதிகப்படியான தண்ணீர் என்ன ஆகிறது? உடலின் பல்வேறு உறுப்புக்களில் — குடல், கல்லீரல், தசைநார்கள், கிட்னி ஆகியவைகளில் இந்தத் தண்ணீர் சேமித்து வைக்கப்படுகிறது.

முட்டைக்கோஸ் எங்கிருந்து வந்தது?

முட்டைக்கோஸ் ரொம்பப் புராதனமான தாவரம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் 'கோஸ்' எதற்கும் பயன்படாத ஒரு தாவரம் என்று கருதப்பட்டது. ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளின் கடற்கரை ஓரங்களில் இது காடாக மண்டிக் கிடந்தது. தாய்த் தாவரமான இந்தக் காட்டுச் செடியிலிருந்து 150 வகையான இனங்களை அபிவிருத்தி செய்தார்கள் ஐரோப்பியர்கள். இவைகளில் மிகப் பிரபலமானவை 'காபேஜ், கேல் (Kale) ப்ரெஸல்ஸ் ஸ்பரௌட்ஸ் (Brussels sprouts) காலி ஃப்ளவர், புரோகோலி (B occoli) கோல்ராபி (Kohlrabi) ஆகியவை.

சாதாரண முட்டைக்கோஸின் நடுவில் இலைக் குருத்து மொட்டும், அதைச் சூழ்ந்து மூடியபடி இறுக்கமாக அடர்த்தியாக இலைகள் வளர்ந்து கெட்டியாகப் பெரிய உருண்டை வடிவம் பெறும். சிவப்பு, வெள்ளை முட்டைக்கோஸ்களின் இலைகள் மிருதுவானதாக இருக்கும். புதிய வெள்ளைக் கோஸைப் பச்சையாகவும் வேக வைத்துச் சமைத்தும் சாப்பிடலாம். 'கேல்' என்ற கோஸ்—காட்டுச் செடிகளைப் போல் இலைகள் முழு வளர்ச்சி பெற்றுத் தனித் தனியாக ஒன்றோடொன்று சேராமல் இருக்கும். பிரெஸ்ஸல்ஸ் ஸ்பரௌட் என்ற இனம் சாதாரண கோஸ், கேல் கோஸ் இரண்டின் குணங்களையும் கொண்டதாக இருக்கும். சின்னச் சின்ன காபேஜ் முடிச்சுக்கள் இதன் தண்டுப் பகுதியில் உருவாகியிருக்க உச்சியில் இலைகள் நீண்டு விரிந்து பரந்திருக்கும்.

காலி ஃப்ளவர் இனத்தில் சாப்பிடும் பாகம் அதன் பூ மொட்டுக்கள் தான், இலைகளல்ல. இம்மொட்டுக்கள் அடர்த்தியாக உருவாகியிருக்கும், இடையிடையே சில இலைகளோடு. காலிப்ளவரைப் பயிரிடுவது கொஞ்சம் சிரமம். கோல்ராபி என்ற இனத்தின் தண்டில் பூமி மட்டத்துக்கு மேலே பந்து உருவில் ஒரு முடிச்சு உருவாகிறது. இந்த முடிச்சுக்களை முற்றுவதற்கு முன் பறித்துச் சமைக்க வேண்டும். அப்போதுதான் அவை ருசியாக இருக்கும்.





SISTA'S/INC/959 TAM

இந்த இதழில் இவர்

- தாணு



அடுத்த இதழில் யார்?

கெடுவான் கேடு நினைப்பான்



அந்த வீட்டில் ஒரு கிளியையும் பூனையையும் வளர்த்துவந்தார்கள். சுதந்திரமாகத் திரியும் பூனை, கூண்டிலே இருக்கும் கிளியைப் பார்த்துப் பல முறை பெருமூச்சு விடுவது உண்டு.

ஒரு நாள் கிளியைப் பார்த்துப் பூனை, ''கிளியாரே,, என்னை யாரும் இந்த வீட்டில் கவனிப்பதில்லை. நான் குறுக்கே போனாலும் சகுனத் தடை என்று விரட்டுகிறார்கள்'' என்று தன் மனக் குமுறலை ஒரேயடியாகக் கிளியிடம் முறையிட்டது. பூனை சொன்னதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த கிளி, ''பூனையாரே, எனக்கு வேளாவேளைக்குப் பாலும் பழமும் கொடுப்பது உண்மைதான். நான் எங்கேயிருக்கிறேன், பார்த்தீர்களா? குற்றவாளியைப் போல் கூண்டிலல்லவா இருக்கிறேன்?'' என்றது வேதனையுடன்.

''கூண்டிலே இருந்தாலும் சுகமாக இருக்கிறீர்களே!''

''இதுவா சுகம்? சுதந்திரமாக என்னால் பறக்கமுடியுமா? இல்லை, வெளியே தான் வந்து உலாவ முடியுமா?''

''ஏன்? உனக்கு ஆகாரம் கொடுப்பதற்காகக் கூண்டைத் திறக்கும்பொழுது வெளியே பறந்து விடுவதுதானே?'' என்று பூனை கிளிக்கு யோசனை கூறியது.

''அது எப்படி முடியும்? நான் பறக்காமல் இருக்க என் இரு சிறகுகளையும் வெட்டி விட்டிருக்கிறார்களே! என்னால் பறக்க முடியாது'' என்றது கிளி.

''உம்..... இருந்தாலும் நீ அதிர்ஷ்டக்காரன். எனக்குப் பசிக்கும்பொழுது யாரும் உணவு தருவதில்லை. எலிகளும் என்னைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்கின்றன. நீ கூண்டிலே இருந்தாலும் குரல் கொடுத்ததும் பசி என்று உனக்கு ஆகாரம் கொடுக்கிறார்கள். நான் குரல் கொடுத்தால் பாலை எடுத்து உறியில் வைக்கிறார்கள்'' என்றது பூனை.

''வயிறார உண்டு கைதிபோல் சிறையிலே இருப்பதைவிட, பசியோடு வாழ்ந்தாலும் நம் விருப்பப்படி சுதந்திரமாக இருப்பது எவ்வளவோ மேல். சுதந்திரம்தான் நமக்கு முக்கியம். என்னைப் போல் நீயும் எப்பொழுதாவது ஒரு நாள் சிறையில் இருந்தால்தான் உனக்குச் சுதந்திரத்தின் அருமை தெரியும்'' என்றது கிளி. ''அப்படியா......?'' என்று பெருமூச்சுவிட்டது பூனை.

கிளிக் கூண்டுக்கு அருகில் இருக்கும் பூனையைக் கண்ட அந்த வீட்டுச் சிறுவன் பூனையைத் துரத்தினான். பூனை மெதுவாக, 'மியாவ்.... மியாவ்' என்று கத்திக் கொண்டே சாமான் அறையை நோக்கிச் சென்றது.

அந்தச் சாமான் அறையில்தான் பூனையின் பசிக்கு எலி கிடைக்கும். அங்கு தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் ஒரு பெட்டியில் வைத்திருந்தார்கள். அந்தப் பெட்டியின் அடியில் ஓர் ஓட்டை இருந்தது. பூனையைக் கண்டதும் எலிகள் அந்த ஓட்டை வழியாகப் பெட்டிக்குள் சென்றுவிடும். எலியைப் பிடிக்க அந்தப் பெட்டிக்கு அருகில் உட்கார்ந்திருந்தது பூனை.

பம்பரம், பந்து இவைகளையெல்லாம் அந்தப் பெட்டியில் போட்டு மறைத்து வைத்திருந்தான், அந்த வீட்டிலிருக்கும் சிறுவன். மாலை வேளையில் தன் அம்மாவுக்குத் தெரியாமல் பந்தை எடுத்துக் கொண்டு விளையாடச் செல்வது அவனது வழக்கம். அன்றும் அதே போல் மெதுவாகச் சாமான் அறைக்கு வந்த அவன் பெட்டியைத் திறந்தான். அந்தச் சமயத்தில் பூனையின் பிடிக்கு அகப்படாமல் ஓடிய எலி அந்தப் பெட்டிக்குள் தாவிக் குதித்தது. அதைப் பிடிக்கப் பூனை தாவவே, பூனையும் பெட்டிக்குள் மாட்டிக் கொண்டது. பூனை திடீரென்று பாய்வே பயந்து போன அந்தச் சிறுவன் பெட்டியை மூடிவிட்டு ஓடிவிட்டான்.

பெட்டிக்குள் மாட்டிக் கொண்ட பூனை, 'எலி எங்கேயிருக்கிறது?' என்று ஆராய்ந்தது. அதன் பசிக்கு ஏற்றவாறு நிறைய எலிகள் கிடைத்தன. பசி அடங்கியதும் ஒரு தூக்கம் போட்



டது பூனை. வெளியே சுதந்திரமாகச் சுற்றித் திரிந்த பூனைக்குப் பெட்டிக்குள் இருப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. வெளியே வர முடியாமல் விழித்தது. பூனை அந்தப் பெட்டிக்குள் நகர்ந்ததால் சில சாமான்கள் அதன் மேல் விழுந்து அடிபட்டது. அப்பொழுது தான் கிளி சொன்னதன் உண்மை என்ன என்று புரிந்தது பூனைக்கு. 'ஆஹா, கிளியின் மூளை பெரிய அறிவாளியின் மூளை' என்று பாராட்டியது. 'அந்தக் கிளியின் மூளையைச் சாப்பிட்டால் எவ்வளவு ருசியாக இருக்கும்' என்று எண்ணியதுடன் கிளியைப் பிடித்துத் தின்னப் பெட்டிக்குள்ளிருந்தபடியே திட்டம் தீட்டியது.

மறுநாள் பெட்டிக்குள் ஏதோ சத்தம் கேட்கவே அந்த வீட்டு எஜமானி பெட்டியைத் திறந்ததும் ஒரே பாய்ச்சலில் வெளியே ஓடிக் கிளிக்கு முன் போய் நின்றது பூனை.

பூனையைக் கண்ட கிளி, ''என்ன பூனையாரே ? நேற்று முழுக்க எங்கே உங்களைக் காணோம்?'' என்று விசாரித்தது. ''அதை ஏன் கேட்கிறாய் கிளியாரே! நான் எதிர்பாராதவிதமாக ஒரு பெட்டிக்குள் மாட்டிக் கொண்டேன். அப்பொழுதுதான் நீ சொன்ன சுதந்திர உணர்வு என்ன என்று எனக்குப் புரிந்தது. நீ கூண்டிலே அடைபட்டுக் கிடப்பதைப் பார்க்கும்பொழுது எனக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது'' என்று நீலிக் கண்ணீர் வடித்த பூனை, ''நான் சொல்வது போல் கேட்டால் நீ தப்பி ஓடிவிடலாம்'' என்றது.

''என்னால்தான் பறக்க முடியாதே!''

''பறக்க முடியாவிட்டால் என்ன ? நான் உன்னை என் முதுகின் மேல் தூக்கிக் கொண்டு மரத்தில் ஏறி அங்கே விட்டு விடுகிறேன். நீ சில நாட்கள் மரத்திலேயே இரு. இறக்கை வளர்ந்ததும் பறந்துவிடு. உன் புத்திசாலித்தனத்துக்கு நீ கிளிக்கெல்லாம் ராஜாவாக இருக்க வேண்டும். உன்னை நினைத்தால் எனக்கு அழுகையாக வருகிறது'' என்றது பூனை.

கிளி முதலில் விழித்தாலும் பிறகு, 'பூனை ஏதோ திட்டம் போட்டிருக்கிறது' என்று புரிந்து கொண்டது.

''என்ன யோசிக்கிறாய் ?'' என்றது பூனை.

''திட்டம் நன்றாகத்தான் இருக்கிறது. நான் உன்னை எப்படி நம்புவது? என்னை நீ சாப்பிடமாட்டாய் என்பதற்கு என்ன உத்தரவாதம்?'' என்றது கிளி.

கிளி இப்படிக் கேட்டதும் தன் திட்டத்தைக் கிளி தெரிந்துகொண்டு விட்டதே என்ற ஆத்திரத்தில் கிளி இருக்கும் கூண்டின் மீது திடீரென்று பூனை பாய்ந்தது.



கிளி, 'கீச்.... கீச்.....' என்று கத்தியது. கிளியின் அலறலைக் கேட்ட அந்த வீட்டு வேலைக்காரன், பூனை கிளியைப் பிடிக்கக் கூண்டின் மேல் பாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். உடனே பக்கத்திலிருந்த கழியை எடுத்துப் பூனையைப் பலமாக அடிக்கவே, கால் ஒடிந்த பூனை நொண்டிக் கொண்டே ஓடிப் போயிற்று.

• பொன்மலை பரிமளம் •



< பூனைகள் :

அய்யய்யே! இது ஒன் ணும் எங்களை மாதிரி யில்லே!

புகைப்படம் :
எம். நடராஜன்

★

ஒட்டைச்சிவிங்கி : V

நீங்கள் என்ன தைலம் உப யோகப்படுத்துகிறீர்கள்?

புகைப்படங்கள் :
டாக்டர் எஸ். பரமசிவன்





"இவ்வளவு கடலைக் > காயைக் குவிச்சு வச்சால் எப்படித் தின்பதாம்?"

புகைப்படம் :
பி. சுந்தரம்





கண்டெடுத்த பிள்ளையாருக்கு என்ன பெயர்?

பம்பாய் கடற்கரையில் ரொம்ப ரொம்ப நாட்களுக்குமுன் கல்லுப் பிள்ளையார் ஒருவர் இருந்தார். இவரை இங்குள்ள செம்படவர்கள் வணங்கி வழி பட்டு வந்தார்கள்.

ஒரு நாள் கடலில் புயல் எழுந்து அலை வீசியதால் பிள்ளையார் கடலுக்குள் போய் விட்டார். பிள்ளையாரைக் காணாத செம்படவர்கள் மிகவும் வருந்தி னார்கள்.

கடலில் மீன் பிடிக்க வெள்ளைக்காரத் துரை ஒருவன் விசைப் படகில் போனான். பெரிய சுறா மீன் ஒன்று அகப்பட்டது. மீன் வேட்டையாடிக் கரைக்குக் கொண்டு வந்து கூறு போட் டார்கள். சுறா வயிற்றிலே கல்லுப் பிள்ளையார் இருந்தார். செம்படவர்க ளுக்கு ஒரே மகிழ்ச்சி. காணாமற் போன பிள்ளையாரைக் கண்டதில் அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

துரை பார்த்தார். ''இந்தப் பிள்ளை யார் என்னால் மீட்கப்பட்டவர். இவர் எனக்குச் சொந்தம். என் பெயரை இவருக்கு வைக்க வேண்டும். அந்த நிபந் தனைக்கு உட்பட்டால் பிள்ளையாரைத் தருவேன்'' என்றார்.

மீனவர்கள் போய்ப் பேஷ்வாவிடம் முறையிட்டார்கள். பேஷ்வா தமது மந்திரி நானா பட்னவிசிடம் யோசனை கேட்டார்.

''சிறிது காலம் போகட்டும். அவ சரப்பட வேண்டாம்!'' என்று ஆறுதல் சொல்லி அனுப்பினார் நானாபட்னவிஸ்.



அந்தத் துரை தமது குடும்பத்துடன் அண்மையில் உள்ள நகரம் ஒன்றினுக்கு உல்லாசப் பயணம் போனார். போன இடத்தில் அவருடைய பெண் குழந்தையை ருக்கம்மா என்னும் ஒருத்தி கடத்திக் கொண்டு போய் விட்டாள். அந்தப் பெண் குழந்தை பேஷ்வா அரண்மனைக்கே வந்து சேர்ந்தது.

அந்தத் துரை குழந்தையைத் தேடு தேடென்று தேடினார். கிடைக்கவில்லை. ஒரு வாரம் ஆயிற்று. ரோஸ் மேரி என்ற அந்தக் குழந்தையுடன் ருக்கம்மா கடை வீதிக்கு வந்தாள். குழந்தையைக் கண்ட ஸோல்ஜர் ஒருவர் துரையிடம் போய் விவரம் சொன்னான்.

துரை தமது குதிரையில் ஏறிப் பாய்ந்து வந்தார். பார்த்தால் அவர் குழந்தை. ருக்கம்மாவிடம் தமது குழந்தையைத் தரும்படி கேட்டார். பணம் காசு நிறையத் தருவதாகச் சொன்னார்.

கூட்டம் கூடி விட்டது. ருக்கம்மா ''ஐயாமார்களே! இந்தக் குழந்தையை நான் காட்டிலே கண்டெடுத்தேன். இதனைக் கொல்லத் திருடர்கள் முயற்சி செய்தார்கள். நான் கெஞ்சிக் கூத்தாடி வாங்கி வந்தேன்'' என்றாள்.

''நீ என் குழந்தையைக் காப்பாற்றியதற்காக உனக்கு ஆயிரம் பவுன் தருகிறேன்'' என்றார் துரை.

''வேண்டாம். எனக்கு ஒரு பவுன் கூடப் பணம் வேண்டாம். ஒரு நிபந்தனைக்கு உட்பட்டால் நான் குழந்தையைத் தருவேன். இல்லாவிட்டால் பேஷ்வாவிடம் போய் நியாயம் கேட்கலாம்.''

'' என்ன நிபந்தனை?''

''இந்த வெள்ளைக்காரக் குழந்தைக்கு என் பெயரை இட வேண்டும். ருக்மிணி அல்லது ருக்கம்மா என்று பெயர் இட வேண்டும்.''

ஹென்றி ஜேம்ஸ் துரைக்கு உடனே ஞானோதயம் பிறந்தது. பிள்ளையாருக்குத் தமது பெயரை வைக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது நினைவில் எழுந்தது. இந்தச் சூழ்ச்சியை பேஷ்வாவின் மந்திரி நானாபட்னவிஸ்தான் செய்திருக்க வேண்டுமென்றும் உணர்ந்தார்.

''ருக்கம்மா! என் குழந்தையின் பெயரை நான் மாற்றமாட்டேன். உங்கள் பிள்ளையார் பெயரையும் மாற்ற வேண்டாம். மந்திரி நானாபட்னவிசிடம் போய் யோசனை கேள்''என்றார்.

''பிள்ளையார் என்ன ஆவது?''

'' நாளைக்கே எந்த நிபந்தனையும் இல்லாமல் தந்து விடுகிறேன்!''

'' இன்றைக்கே ரோஸ்மேரியை அழைத்துப் போங்கள்!'' என்றாள் ருக்கம்மா.

ஒரு பைசாவும் ஆயிரம் ரூபாயும்

''ஷபீனு''

சுந்தரலிங்கம் பெரிய பணக்காரர்; இலட்சக் கணக்கில் சொத்துக்கள் இருந்தன. பெரும் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அதில் வேறு நிறைய பணம் வந்து கொண்டிருந்தது. மேலும் மேலும் வீடுகளாகவும், நிலங்களாகவும் சொத்துக்களைச் சேர்த்து வந்தார். கூடவே தாம் பணம் படைத்தவர் என்ற அகங்காரம், செல்வச் செருக்கு எல்லாம் சேர்ந்துவிட்டன. ஏழைகளைப் புழுக்களாக மதித்தார். தம்முடைய செல்வத்தால் உண்டான மமதையால் ஏழைகளை அவ்வப்போது அவமானம் செய்தும் வந்தார். ஆகவே சாதாரண மானவர்கள் அவரிடம் பேசுவதற்கே அஞ்சினர்.

சுந்தரலிங்கம் ஒரு நாள் வெகு தொலைவில் உள்ள நகரத்தில் மூன்று வீடுகள் விலைக்கு வருவதை அறிந்து, தம் கப்பல் போன்ற சொகுசான காரில் ஏறி அவ்வூருக்குச் சென்றார். வீடுகளைப் பார்த்தார். அவருக்குப் பிடித்துவிட்டது.

கலகலப்பான கடைத்தெருவில், தம்முடைய பெரிய காரில் சாய்ந்து, வீட்டுத் தரகருடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்சில் பணப் பெருமையும், திமிரும் வெளிப்பட்டன.

''என்ன தரகரே, ஒவ்வொரு வீடும் முப்பது ரூபாய் சொல்றீரே.... இருபது ரூபாய்க்கு வாங்கித் தருவீரா ?''

கையைக் கட்டிக் கொண்டிருந்த தரகர் பயபக்தியுடன் பேசினார். ''அவ்வளவு குறைக்க முடியாதுங்க. இருபத்தி எட்டு ரூபாய்ன்னு பார்க்கலாம்.... அதுக்குக் குறைக்க முடியாதுங்க....''

''அதெல்லாம் நடக்காது. இருபத்தி ஐந்து ரூபாய் ஒரு வீடு. முடிந்தால் பாருங்க. இல்லேன்னு வேண்டாம்.''

தரகர் தலையை ஆட்டினார்.

''சரிங்க.... இருட்டிக்கிட்டே வருது. மழை வரும்போலே இருக்கு. நீங்க ஊருக்குப் போங்க..... நான் பேசி முடிச்சுக்கிட்டு வரேன்.....''

சுந்தரலிங்கம் அமர்த்தலாகக் காரில் ஏறி அமர்ந்து 'ஸ்டார்ட்' செய்தார்.

''சார்.....!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினார்.

ஓர் ஏழைச் சிறுவன்; ஏழு வயது இருக்கும். அதிசயத்தோடு அவரையும், அந்தச் சொகுசான காரையும் விழுங்கி விடுவது போல் பார்த்தவாறு நின்றிருந்தான்.


சுந்தரலிங்கத்துக்கு எரிச்சலும், கோபமும் பொங்கின.

''பிச்சைக்காரப் பயலே...! தள்ளுடா அந்தண்டை....'' என்று சிடுசிடுத்தார்.

''இல்லே சார்....! இருபது ரூபாய்க்கு ஒரு வீடுன்னு சொன்னீங்களே. எங்கே சார் இருக்கு? சொன்னீங்கன்னா எங்க அப்பாகூட ஒண்ணு வாங்குவார்....'' பையனின் கண்களில் ஆர்வம் மின்னியது.

''ஹா... ஹா...'' — பலமாகச் சிரித்தார் சுந்தரலிங்கம். ''அடப் பரதேசி.. உனக்கு இருபது ரூபாய்க்கு வீடு வேணுமா....? இருபது ரூபாய்னு இருபதினாயிரம் தெரிஞ்சுதா... எங்களுக்கெல்லாம் ஆயிரம் ரூபாய்னு பைசா மாதிரி. புரிஞ்சுக்கோ...ஹா... ஹா....'' என்று மேலும் ஏளனமாகச் சிரித்தபடி காரைக் கிளப்பினார் சுந்தரலிங்கம்.

அந்தச் சிறுவனின் முகத்தில் ஏமாற்றமும், அவமானமும் கூழிவிட்டன.



வானத்துக்கும் பூமிக்கும் சரமிட்டாற் போன்ற பெரு மழை; ஊழிக் காற்று உலகையே குலுக்கியது. இடியும், மின்னலும் போட்டி போட்டுக் கொண்டு பூமியைக் கிடுகிடுக்க வைத்தன.

நட்ட நடுச் சாலையில் இருளில் காரில் அமர்ந்து தவித்தார் சுந்தரலிங்கம். சொகுசான கார் திடீரென்று வேலை நிறுத்தம் செய்துவிட்டது. 'மெக்கானிக், வந்து பார்த்தால் ஒழியக் கிளம்பாது. சுந்தரலிங்கத்துக்கு அஸ்தியில் ஜுரம் கண்டுவிட்டது. இருபுறமும் காடு, இரவு வேளை, பேய் மழை, அவர் கையில் ஆயிரக்கணக்கில் ரூபாய்கள் இருந்தன. உடலும் உள்ளமும் பரிதவித்தன. எந்தப் பக்கம் சென்றாலும் பத்து மைல் நடந்தால்தான் மனித நடமாட்டம் தெரியும்.

சுந்தரலிங்கம் திடீரென்று தெய்வங்களை வேண்ட ஆரம்பித்தார். எல்லோருக்கும் பொதுவான ஈசுவரன் சுந்தரலிங்கத்தின் பிரார்த்தனைக்கும் செவி சாய்த்தான்.

'தடதட'வென அசுரவேகத்தில் வந்து கொண்டிருந்தது ஒரு பிரயாணி பஸ்.

கையைக் காட்டி நிறுத்தி, தோல் பையுடன் உள்ளே ஏறினார் சுந்தரலிங்கம். உடல் தொப்பலாக நனைந்து விட்டது.

''டிக்கட்.... டிக்கட்.... சரியா நாற்பது பைசா எடுங்க சார்.....சில்லறை இல்லை... இல்லேன்னு இறங்கிடுங்க..'' என்று சிடுசிடுப்பாய்க் கூறியவாறே வந்து கொண்டிருந்தார் கண்டக்டர்.

சுந்தரலிங்கம் தோல் பையைத் திறந்தார்.

எல்லாம் நூறு ரூபாய் நோட்டுக்கள்.

சில்லறை முப்பத்து எட்டு பைசா தான் இருந்தது. இரண்டு பைசாவுக்கு என்ன செய்வது?

நூறு ரூபாய் நோட்டை நீட்டினால் கண்டக்டர் என்ன சொல்வார் ?

சுந்தரலிங்கம் தவித்தார்.


'' சார்...... இந்தாங்க இரண்டாயிரம் ரூபாய்......''

திகைத்துத் திரும்பினார் சுந்தரலிங்கம்.

மாலையில் அவர் விரட்டிய ஏழைச் சிறுவன். அவன் நீட்டிய கையில், இரண்டுபைசா நாணயம் பளபளத்தது.


ஆம்! அந்த இரண்டு பைசா—இந்த இக்கட்டான நிலையில் — சுந்தரலிங்கத்துக்கோ ஆயிரம் என்ன, இரண்டு லட்சம் போலத்தான் இருந்தது!


பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
BOOKS
நாளைக்கு அம்மாவின் பிறந்த நாள். என்ன பரிசு தரலாம்...?
எல்லாவிதமான ஸ்வீட்டுகளும் தயாரிக்கும் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. அம்மா ரொம்ப சந்தோஷப் படுவாள். இதுதான் சரியான பரிசு.
நீங்களே சமைத்து மகிழலாம்
அருமையான சமையல் கலைப் புத்தகம் இது. இதில் பிஸ்கட் சாக்லேட் செய்யற முறையெல்லாம் கூடப் போட்டிருக்கு.
அப்படியா? உன்னோட பிரசன்டேஷனுக்கு ரொம்ப தாங்க்ஸ் பாலு.
அன்று பகல்
எங்கேம்மா கிளம்பிட்டே? அந்தப் புஸ்தகத்திலிருந்து இன்னிக்கு ஏதாவது புது ஸ்வீட் பண்ணித் தருவேன்னு நெனைச்சேன்.
இன்னிக்கில்லே பாலு. நான் ரொம்ப முக்கியமாக் கொஞ்சம் வெளியே போகணும். வீட்டைப் பாத்துக்கோ, என்ன?
எல்லா ஸ்வீட்டுகளுமே செய்யறது ரொம்பச் சுலபமா இருக்கு. நானே கூடச் செய்துடலாம் போலிருக்கே...ம்... செய்தால் என்ன? அம்மா வந்ததும் ஆச்சரியப்பட வைக்கலாம்.
எல்லாம் ரெடி. ஆரஞ்சு சாக்லேட் டாஃபி அற்புதமா இருக்கப் போறது. வெண்ணெய், மைதா மாவு, எஸன்ஸ், எல்லாம் ரெடி... ..ம்.. நினைச்சாலே நாக்கிலே ஜலம் சுரக்கிறது...
அளவுப்படிக் கலக்குவது கூட அப்படியொண்ணும் சிரமமில்லே. இதை இப்படியே அடுப்பிலே வைத்துக் கொதிக்கவிட்டுப் பதம் பார்த்து...




சற்றைக்கெல்லாம்
ஐயையோ! பொங்கி வழிந்தால் என்ன செய்யணும்னு அதிலே போடல்லியே...
அட, ராகவா! தாஸ் அடுப்பிலேயெல்லாம் வழிந்து பாழாக்கறதுக்குள்ளே இதை இங்கிருந்து அப்புறம் படுத்திடணும்...
அடடா! அதிகமாகக் காய்ந்துவிட்டது போலிருக்கு... தீப்பிடிச்சுண்டுடுத்தே...
பா...லூ...ஊ...! என்னடா செய்யறே?
வந்து... ஆரஞ்சு சாக்லேட் டாஃபி செஞ்சு பார்த்தேம்மா...
உங்க பிள்ளை சமையல் செய்ய ஆரம்பிச்சுட்டான். குழந்தையைத் தக்கபடி பாராட்டுங்க.
பத்து நிமிஷங்களுக்குப் பிறகு.
நல்ல வேளை சமையல் கலைப் புத்தகத்தைக் கால் சராய்க்குள்ளே வைத்துக் கொண்டிருந்ததை அப்பா கவனிக்கவில்லை. அந்தப் புத்தகம் அம்மாவை விட எனக்குத் தான் பயன் பட்டது. அப்பாவின் அடி முழுவதையும் இதிலேயா தாங்கிக் கொண்டது!
இருந்தாலும் சமையலில் அம்மா சமத்து நமக்கு வராது தான். நான் படிக்கிற தொழில் திருத்தி திறது தான் நல்லது.

[அறிவுத் திறனைச் சோதிக்க இங்கு சில பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இவைகளைப் போட ஒவ்வொன்றுக்கும் ஒரு நிமிஷத்துக்கு மேல் எடுத்துக் கொள்ளக் கூடாது.]




மேலே ஆறு கோலங்கள் உள்ளன. இவைகளை ஒரு நிமிஷம் உற்றுப் பாருங்கள். அவைகளின் குணங்களை மனத்தில் பதிய வைத்துக் கொண்ட பிறகு அருகேயுள்ள படத்தில் கடைசியில் வினாக்குறியிட்டுள்ள இடத்தில் மேலேயுள்ள கோலங்களில் எதை அமைத்தால் பொருத்தமாக இருக்கும் என்று தேர்ந்தெடுங்கள், பார்க்கலாம்.



விடை: அருகிலுள்ள படத்தில் முதல் வரிசையில் வட்டங்களின் அமைப்பும் 2ம் வரிசையில் டயமண்ட் உருவ அமைப்பும் உள்ளன. இவைகளிலிருந்து மாறுபட்டதாக (சதுரங்களாக) 3வது வரிசை இருப்பதால் அதே குடும்பத்தைச் சேர்ந்த 2வது குறியீடே பொருத்தமானது.


மூளைக்கு வேலை




இந்த வட்டத்தில் உள்ள ஒரு வீட்டில் பொருத்தமான ஓர் எண்ணை இருத்த வேண்டும். அது இங்குள்ள எண்களோடு ஏதோ ஒரு விதத்தில் ஒற்றுமை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

விடை: 54. வட்டத்தின் இடது பாதியில் உள்ள எண்கள் வலது பாதியில் உள்ள எண்களைப் போல மூன்று மடங்கு உள்ளன. ஆகவே 18×3=54.

மேலே உள்ள ஆறு வகையான அமைப்புக்களிலிருந்து ஏதோ ஓர் அமைப்பை அருகிலுள்ள மூன்று வரிசை அடுக்கின் கடைசி இடத்தில் அமைக்க வேண்டும். படங்களை நன்கு உற்றுப் பார்த்து அதன் குணத்துக்கு ஏற்ப ஒன்றைத் தேர்ந்தெடுங்கள் பார்க்கலாம்.



விடை: 6. முதல் இரு வரிசைச் சதுரங்களிலுள்ளே இருக்கும் பௌர்ணமி வட்டங்கள் குறைகின்றன. அமாவாசைச் சதுரங்கள் அதிகரிக்கின்றன. அதே முறையில் பார்த்தால் ஆறாவதுதானே பொருத்தம்.





தெரியுமா?

497. உயிர் நூல் பயில்பவர்களுக்குத் தெரியும் க்வாட்ரபெட் (quadraped) என்றால் என்ன என்று. நீங்களும்தான் அறிந்து சொல்லுங்களேன். உலகின் மிகப் பெரிய க்வாட்ரபெட் எது?

498. குழல் விளக்கிலிருந்து (ட்யூப் லைட்) ஒளி ஏற்படுவது எப்படி?

499. மெகல்லன் ஜலசந்தி எங்கு உள்ளது?

500. டாம்ஸ்க் (Tomsk) என்னும் இடம் எங்குள்ளது?

501. கண்ணாடி தயாரிப்பதற்குத் தேவையான முக்கிய பொருள்கள் என்னென்ன?

502. தண்ணீரிலுள்ள இரு வாயுக்கள் எவை?

503. 1939 — 1945ம் ஆண்டுகளில் நடைபெற்ற இரண்டாவது உலகப் போரில் துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டு போரிட்டது. இது தவறு? சரியா?

504. புராதன எகிப்தியர்கள் மின் சாரத்தின் துணையுடன் ஆராய்ச்சிகள் நடத்தினார்கள். இது உண்மையா?

505. சூரிய ஒளியின் ஜ்வலிப்பு தாங்காமல் பாம்புகள் தங்கள் இமைகளை அடிக்கடி கொட்டிக் கொள்ளும். இந்தக் கூற்று சரியா? தவறு?

506. போலோ விளையாட்டில் ஒரு கோஷ்டிக்கு எத்தனை பேர்கள் என்று தெரியுமா?

507. கடலில் வாழும் மீன்களுள் மிகவும் வேகமாக நீந்தக் கூடியது எது?

508. ரோம் நகர் எந்த நதிக் கரையில் உள்ளது?

509. இரண்டாவது உலகப் போர் முடிவடைந்த தேதி என்ன?

510. பறவைகளுக்கு இமை உண்டா?

511. ஒரு மீட்டரின் நீளம் அங்குலத்தில் துல்லியமாக எவ்வளவு?

512. உலகில் உள்ள கண்டங்களில் ஜன நெருக்கம் அதிகமாக உள்ள கண்டம் எது?

513. ஆப்பிரிக்காவின் மிக உயரமான மலைச் சிகரம் எது? எத்தனை அடிகள்?

514. இந்திரனின் வாகனம் ஐராவதம் — வெள்ளை யானை. இந்த வெள்ளை யானை வாழும் நாடு ஒன்று உள்ளது. அது எது?

515. முதல் எலிஸபெத் ராணியின் நினைவாக அமெரிக்காவில் ஒரு மாகாணத்துக்குப் பெயரிட்டிருக்கிறார்கள். அது எது?

516. பேஸ் பால் ஆட்டத்தில் ஒரு கோஷ்டியில் எத்தனை பேர்.

517. ட்ராட்ஸ் (Draughts) என்று ஒரு விளையாட்டு. இதில் எத்தனை காய்கள் பயன்படுத்தப்படுகின்றன?

518. பில்லியர்ட்ஸ் மேஜையில் எத்தனை பைகள் இருக்கும் தெரியுமா?

519. வினிகரில் உள்ள அமிலத்தின் பெயர் என்ன?

520. பனிக்கட்டி ஏன் மிதக்கிறது?

521. எந்த இரு கடல்களின் சந்திப்பினால் பாஸ்போராஸ் (Bosphoras) ஜல சந்தி ஏற்பட்டுள்ளது?

விடைகள்: 497. யானை. 498. நியான் வாயுவில் மின்சக்தி பாயும்போது பிரகாசமான ஒளி ஏற்படுகிறது. 499. தென் அமெரிக்காவின் தென் முனைக் கோடியில். 500. சைபீரியாவில். 501. மணல், பொட்டாஷ், போராக்ஸ் ஆகியவை. 502. பிராண வாயு, ஜலவாயு. 503. தவறு. இரண்டாவது உலகப் போரில் துருக்கி நடுநிலை வகித்தது. 504. உண்மை. தோல் ஆடையில் ஆம்பர் என்ற கல்லைத் தேய்த்தால் மின்சக்தி ஏற்படும் என்ற உண்மை புராதனக் கிரேக்கருக்குத் தெரிந்திருந்தது. 505. தவறு. பாம்புகளுக்கு இமைகள் கிடையாது. 506. நான்கு பேர். 507. கருமீன். 508. டைபர் நதிக் கரையில். 509. 14-8-1945. 510. சில பறவைகளுக்கு மட்டும் உண்டு. உதாரணம்: நெருப்புக் கோழி. 511. 39.37 அங்குலங்கள். 513. 512. ஐரோப்பாக் கண்டம். 513. கிளிமஞ்சரோ, 19,321 அடிகள். 514. தாய்லாந்து. 515. வர்ஜீனியா. முதல் எலிஸபெத்துக்கு வர்ஜின் க்வீன் (கன்னி ராணி) என்று பெயர். 516. ஒன்பது பேர்கள். 517. இருபத்திநான்கு காய்கள். கட்சிக்குப் பன்னிரண்டு காய்கள். 518. ஆறு பைகள். 519. அசிடிக் அமிலம். 520. பனிக்கட்டி என்பது நீரின் திடநிலை. நீரின் திரவ நிலையை விட இதில் அடர்த்தி குறைவு. ஆகவே பனிக் கட்டி நீரைவிட இலேசானது. 521. கருங்கடல் மர்மாராக் கடல் சந்திப்பில்.




தெரியுமே!

[illegible] வெளிவரும் கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. [illegible] அச்சகத்தில், [illegible] பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் [illegible] வெளியிடப்பட்டது. ● [illegible]
சந்தா விவரம்: ஒரு வருடம் ரூ. 7-00 ● ஆறு மாதம் ரூ. 3-50 ● வெளிநாடுகளுக்கு 18-00

நீங்கள் விற்பது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை மேலும் நன்கு விற்பனை செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் அதிக பட்சமான வாடிக்கையாளர்களின் கவனத்தை உங்கள் கடையின் பக்கம் திருப்புகிறது.



உங்கள் ஜெனரல் ஸ்டோரில் பொருள்களை அதிகக் கவர்ச்சியுடன் காட்சியில் வைக்க உதவுகிறது.



உங்கள் ரெஸ்டாரெண்டில் உள்ள சூழ் நிலையைப் பிரகாசமாக்க உதவுகிறது.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் 100 வாட் பல்பினைப் போல் இருமடங்கு ஒளி தருகிறது. இந்த ஒளி சிறந்ததும், பிரகாசமானதும், கூசாததுமானது, கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது. இருந்தும், மின்சாரச் செலவு ஒரு 40 வாட் பல்புக்காகும் அளவேதான்.

இந்தக்கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் இணைப்பு ஒரு பிலிப்ஸ் 40 வாட் ஃப்ளூரோஸெண்ட் பல்ப் கொண்டது. அது சிறந்த, அதிகப்பிரகாசமான ஒளியைத் தருகிறது. பிரபலமான பிலிப்ஸ் பாலியெஸ்டர் பலாஸ்ட், ஸ்டார்ட்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் மற்றும் ஸ்ப்ரிங் இணைந்த ரோடார் லாம்ப் ஹோல்டர் இவைகளைக் கொண்டது பிலிப்ஸ் ஸ்ட்ரிப் லைட். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகத்திற்கு சிக்கனமானது. மேலும் சிறந்த முறையில் விற்பனை செய்ய உதவுகிறது.

இன்றே பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்துங்கள்—உங்கள் வீடு, கடை மற்றும் தொழிற்சாலையில்.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்
மூலம் அரைப்பங்கு செலவில் இருபங்கு வெளிச்சம் பெறுங்கள்.


பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-3559A

துரிதமாக. ஜாக்கிரதையாக. நிச்சயமாக.

ஓரிடத்திலிருந்து
மற்றொரு இடத்திற்கு
நேரிடை
பார்சல் சர்வீஸ்



எப்படி?

இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி, பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.

இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்களை ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் மூலதனத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

இந்தச் சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- அவர்களின் டிரைவர்கள், உடலியலையும் உளவியலையும் பொருத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப் பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 100 மைல்கட்கு ஒன்றுவீதம் ரிப்பேர் மற்றும் பராமரிப்புக்கான வசதிகொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

தென் இந்தியா முழுமையிலும் சரக்குகளை புக் செய்யும் ஆபீஸ்கள் பரவி உள்ளதால் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ் TVS

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)
மதுரை

FDSSR-1712TMB